தென்மொழி

சுவடி. 7.

ஓலை.10,11.

விலை

75 காசு

இறுதிப் போர்!

ஆடினை ஆயிரம்! பாடினை ஆயிரம்!
ஆர்ப்புற யாத்தனை விடுதலைப் பாயிரம்!
அசைத்ததா பகைவரை உன்றனின் வாயுரம்?
தமிழா! அட, தமிழா—நீ
அழன்றெழு! அரிமா நடையிடு! வினைமுடி!
அதுதான் செந்தமிழ்த் தாயுரம்!

வீசினை கைகளை; விளைத்தனை சொற்களை;
விலக்கினை யா,குல மதமெனும் புற்களை?
விளைத்திட டா,தனித் தமிழெனும் நெற்களை!
தமிழா! அட, தமிழா—நீ
விரைந்தெழு! வரிப்புலி நடையிடு; துணிவொடு!
வீழ்த்திடு வாய்,பகைப் பற்களை!

உன்னுடன் பிறந்தவன் உனையெதிர்க் கின்றான்;
உன்பகைக் கே,செருப் பாய்உழைக் கின்றான்;
உங்களை இரண்டாக்கி ஆரியன் வென்றான்!
தமிழா, அட, தமிழா—நீ
உடன்விழி! களிறென நடையிடு; முனைவொடு!
உயிர்ப்பிலா விடில்,அவன் கொன்றான்!

ஆரியப் பார்ப்பனன் திருந்தினான் என்றே
ஆருனக் குரைத்தனர்? அவன்குணம் ஒன்றே!
அவனுடற் பூணூலும் உரைதரும் நன்றே!
தமிழா, அட, தமிழா—நீ
ஆர்த்தெழு! ஏறென நடையிடு! வலிவொடு
அகப்பகை விலக்குக இன்றே!

எத்தனை ஆண்டுகள் புரிந்தனை போரே!
இற்றதா ஆரியப் பார்ப்பனர் வேரே!
இன்னுமுன் கட்டாரிக் குண்டடா கூரே!
தமிழா! அட, தமிழா—நீ
இணைந்தெழு! இடியென முழங்கிடு! நூறிடு!
இலையெனில் தொலைந்ததுன் பேரே!

தனித்தமிழ் இலக்கியத் திங்களிதழ்

www.thamizham.net - Free E book No 7421

நமக்கு வந்த மடல்கள்.

O 166: தனித்தமிழ்ப் பெரும! எங்களின் துலேத் தென்மொழி கண்டு, நீண்ட நாட்களாகத் தன் தாயைக் காணுத சேயொன்று தாயைக் கண்டதுபோல் மிக அகமகிழ்ந்தேன். சொல்லால் விளக்க வல்லேன் அல்லன். இதழில் உலகத் தமிழ்க்கழக ஆண்டு நிறைவு விழாவின் நிகழ்வுகளைச் செம்மையாக வெளியிட்டுள்ளீர்கள். நேரில் தான் எம்மனோர்க்குக் காணக்கொடுத்து வைக்கவில்லை யெனினும் தென்மொழியின் வாயிலாகக் கண்டு நிறைவு எய்தினேன்.

தனித்தமிழ் நோக்கமுள்ள யான், தென்மொழியின் வளர்ச்சியில் மிக நாட்டமுள்ளேன். நாளும் தென்மொழியின். எண்ணந்தான். பொருள் முடக்கத்தால் ஏதும் இடலவில்லேயே என மிக வருந்துகிறேன். ஏந்து கிடைக்குந்தொறும் இயன்றதைச் செய்கிறேன். வெறும் எழுத்துரை எனக்கொள்ளாதீர்கள். உண்மை. அரசினர் ஊழியனுக வுள்ள யான் வரும் வருவாயில் இல்லறத்தை நடத்துகிறேன். எனினும் தென்மொழி யாக்கத்தில் மிக விழைவு கொண்டுள்ளேன். என் குருதி. நரம்பு. தசை, எலும்பு அனைத்தும் தமிழ்நாடு, தமிழர், தமிழுக்கே உரியன.

–ந. தேவராசன், கலவை. வ. ஆ.

O 167: கன்னித்தமிழின் எல்லை கன்னியாகுமரி முதல் திருவேங்கடம் வரையிலும்உண்டு. இல்லையென்போர் யார் இன்று? தமிழகத்தின் வடமேற்கு எல்லையாக இருந்துவரும் தாளவாடிப் பகுதி, பண்டையில் எருமைநாடு எனப்பெற்ற இற்றைநாள் மைசூர் மாநிலத்திற்குச் சொந்தமானது என்று சிறுநரிகள் ஊளையிடுகின்றன. நேருவின் காலத்தில் தேவிகுளம் பீர்மேடு கொள்ளேகாலப் பகுதிகளைக் கேரளத்திற்கு விட்டுக்கொடுத்துவிட்டு அங்கு வாழும் தமிழர்களைச்சிதைத்து விட்டோம். இன்னும் எண்ணுவோமானுல். திருப்பதியைக் கட்டிய காவலன் சோழநாட்டுமன்னன் சொந்தம் கொள்ளாமல் உரிமையிழந்ததற்கு இடைவெளியில் ஆட்சி புரிந்த தமிழக் காட்டிக் கொடுப்பான்களே காரணியம். இந்த நிலையில் தமிழினத்தை மீண்டும் இழிவுபடுத்த எண்ணிஞல், இற்றைத் தமிழன் உரிமைகளை இழந்து பேடியாக வாழ விரும்பமாட்டான். துடித்துக்கொண்டிருக்கும் தமிழ் நெஞ்சங்களை யாராலும் தடுத்துவிட முடியாது! –சிவகங்கை அழகேசன்.

O 168: அன்புடையீர்! மூன்று திங்கள்களாகத் தென்மொழி படித்து வருகிறேன். உ. த. க. வின் வளர்ச்சி பற்றி மகிழ்வடைகிறேன். தி. மு. க. அரசு விரைவான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளா விட்டால், கட்டாயம் உ. த. க. வளர்ந்து ஆட்சியைக் கைப்பற்றியாக வேண்டும். உலகமெங்கும் தமிழ் பரவவேண்டும். இதற்கு முதலில் எல்லா அறிவியல் கருத்துகளையும் தனித்தமிழில் ஆக்க வேண்டும். தனித்தமிழில் ஆக்கிய அறிவியற் பொத்தகங்களை உலகமெல்லாம் அனுப்பி எல்லா உலகநூலகங்களிலும் பயின்றுவரச்செய்யவேண்டும். இப்படிச் செய்தால் இலத்தீனை ஆங்கிலம் அகற்றியதுபோல், ஆங்கிலத்தைத் தமிழ் அகற்றி உலக மொழியாக விளங்கும்..

மகிழ்கோ (ஆனந்தராசன்), இரண்டாம் மருத்துவம், புதுச்சேரி.

(தொடர்ச்சி 3-ஆம் அட்டைப்பக்கம்)

www.thamizham.net - Free E book No 7421

தென்மொழி

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே!

சுவடி 7: ஓலை: 10, 11

நளி, சிலை தி. பி. ௨000 நவம்பர்-டிசம்பர்-69 சனவரி.-(1970)

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்.

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.

தணிப்பரிதாம் துன்பமிது; தமிழ் வளர்த்த மதுரையிலே தமிழ்தானில்லை!

"வாணிகர்தம் முகவரியை வரைகின்ற பலகையில் ஆங்கிலமா வேண்டும்?" என்று கேட்டார் பாவேந்தர். அவர் கேட்ட ஆண்டு 1945. இந்தக் கட்டுரை எழுதப் பெறுகின்ற ஆண்டு 1970. இடைவெளி இருபத்தைந்து ஆண்டுகள். இந்த இருபத்தைந்தாண்டுகளில் தமிழகத்தில் செய்யப்பெற்ற தமிழ் வளர்ச்சிக்கான முயற்சிகள் கொஞ்ச நஞ்சமன்று. தனித்தமிழ் மலையாம் மறைமலை வாழ்ந்து மறைந்தது இந்த இடைவெளியில்தான்! எவருக்கும் அஞ்சாத ஏற்றமும் தறுகணும் கொண்டு விளங்கிய பசுமலை சோமசுந்தர பாரதியார் வீறு

www.thamizham.net - Free E book No 7421

முழக்கியது இந்த இடைவெளியில்தான்! நின்ற நெடுந்தோளும் குன்றையும் தூளாக்கும் கொள்கையுரமும் வாய்ந்த பாவேந்தர் பாரதிதாசன் ஏறுநடை யிட்டது இவ் விடைக்காலத்தில்தான்! தமிழர் நெஞ்சில் எல்லாம் தன்மானத் தீமூட்டி, ஆயிரமாயிரமாண்டுகளாகக் குடிகொண்டிருந்த அறியாமையையும் அடிமைத்தனத்தையும் ஓட்டிய பெரியாரின் உரஞ்சான்ற கொள்கைக்கெல்லாம் விளைவு கண்டு வந்ததும் வருவதும் இவ்விருபத்தைந்தாண்டுக்கால எல்லை வெளியில்தான். மொழிக்கனலும் வரலாற்றொளியும் ஏற்றுப்பெற்று மக்களை விழிப்புறச் செய்து வரும் மொழியியல் ஞாயிறு பாவாணர் வாழ்ந்து வருவதும் இக் காலத்தில்தான். பொதுமக்கள் தம் எண்ணத்திலும் எழுத்திலும் பேச்சிலும் ஒருவகைத் தமிழ் வெறியையே மூளச்செய்த அறிஞர் அண்ணா தோன்றி மறைந்ததும் இந்தக் காலத்துண்டத்தில்தான்! மூவேந்தர் அமைத்த முத்தமிழரசுக்குப் பின் தன்மானத் தமிழர்கள் தமிழக அரசை அமைத்ததும், ஆண்டுகொண்டிருப்பதும் இந்தக் கால வெளியில்தான்! இருந்தும் என்ன பயன்?

ஆரியம் தமிழக மக்களுக்கு ஊட்டிய நச்சுணர்வை முறித்துவிட இன்னும் நம்மால் முடியவில்லை. ஆங்கிலம் நம்மை அடிமைப் படுத்திப் பூட்டிய விலங்கை உடைத்தெறிய இன்னும் இயலவில்லை. பாவேந்தரின் மறவுணர்வுப் பாடல்களும், மறைமலையின் தனித்தமிழ் மானமும், பசுமலைப் பாரதியின் அரிமா முழக்கமும், பெரியாரின் தன்மான வெடியும், அண்ணாவின் சொல்லடுக்கும், பாவாணரின் பதைபதைப்பும், வரலாற்று விளக்கமும், தமிழகமக்களின் உள்நரம்பில் எந்த ஒரு வகை மாற்றத்தையும் ஏற்படுத்தி விடவில்லை! இன்னும் தமிழனின் நாடித்துடிப்பின் அடிமையச்சம் தணிந்துவிட வில்லை; தன்மானக் குருதி கொப்பளித்துவிடவில்லை. தமிழனின் மானங்கெட்ட தன்மை அத்துணைப் பெரிது; அவனின் உடல் தோல் அத்துணைத் தடிப்பானது; அவனின் தொடை நரம்புகள் அந்த அளவில் தொய்வுற்றுக் கிடப்பன; அவனின் தோள்கள் அவ்வளவில் சூம்பியிருப்பன. அவனின் குருதியில் ஏற்றிய நச்சுத்தனம் அவனையே அழித்தாலும் அழிக்குமே தவிர, அவனைத் திருந்தவிடாது. அத்துணை வலியது; அளவு மிக்கது; ஆண்டாண்டுக்காலமாய் தொடர்ந்து ஊட்டப்பெற்று வருவது. இப்படிச் சொல்லப்படுவது மிகை என்றோ, எரிச்சலால் கூறப்படுவதென்றோ எவரும் கருதிவிட வேண்டா! உண்மையானது; உறுதியானது; உணர்ந்தால் உங்களுக்கும் புலப்படுவது.

எடுத்துக்காட்டுக்கு எங்கும் போக வேண்டா. பாண்டியன் ஆண்ட மதுரைக்கு வாருங்கள். பைந்தமிழ் வளர்த்த இடம் என்று இலக்கியங்

www.thamizham.net - Free E book No 7421

களில் படித்துப் பெருமைபேசித் திரிகின்றோமே அந்த மதுரையைத்தான் சொல்கின்றேன். பெரிய நகரம்! ஆறுகிடந்தன்ன அகன்ற தெருக்கள்! கூட கோபுரங்கள் நிறைந்த கொடித்தேர் வீதிகள்! தமிழ் விளையாடிய அந்தத் தலைநகரத்தில்தான் இன்று தமிழ் சவலைப்பிள்ளையாகவும் சப்பாணிப்பிள்ளையாகவும் நொண்டி நடையிடுகின்றது.

> **"தணிப்பரிதாம் துன்பமிது! தமிழகத்தின் தமிழ்த் தெருவில் தமிழ்தானில்லை!"**

—என்று பாவேந்தர் குறைப்பட்டு நொந்து கொண்டாரே; அந்தத் தமிழ்த்(!)தெருக்கள் வேறு எங்கும் இல்லை. அங்கயற்கண்ணி செங்கோலோச்சி நின்றாளே, அந்த மதுரையின் தெருக்கள்தாம் அவை, அந்தத் தெருக்களில்தான் இன்று தமிழ் கொலை செய்யப்பட்டுக் குற்றுயிரும் குலையுயிருமாகக் கிடக்கின்றது. ஆனால் பாவேந்தர் அன்று பாடியது மதுரையைப் பார்த்தன்று; சென்னையைப் பார்த்து; திருச்சியைப் பார்த்து; சேலத்தைப் பார்த்து; கோவையைப் பார்த்து: தாம் வாழ்ந்த புதுவையைப் பார்த்து. அதனால்தான் **தமிழகத்தின் தமிழ்த்தெருவில்** என்று பொதுவாகப் பாடினார். இன்று மதுரையைப் பார்த்துப் பாடியிருந்தாரானால் **தமிழ்வளர்த்த மதுரையில்** என்று சிறப்பாகப் பாடியிருப்பார். அவர் சுட்டிய வாணிகர்களும் மதுரை வாணிகர்களாகவே இருந்திருந்து பாடல் பெற்றிருப்பார்கள்.

ஆனால் பாவேந்தர் மதுரைக்கே வந்திருக்கவில்லையா? தங்கியிருக்கவில்லையா? நாள் கணக்காய் மாதக்கணக்காய் தங்கி, உண்டு, உறங்கி ஓய்வெடுத்த இடமாயிற்றே அது! **மதுரை புரட்சி புத்தக நிலையப்** படிக்கட்டுகள் அவர் வரவாலும் போக்காலும் பாதி தேய்ந்து போயிருக்குமே! அந்தப் புத்தக நிலையம் உள்ள தெருவில் மருந்துக்குக் கூட தமிழ்மணமில்லையே! (அந்தப் புத்தகநிலைய விளம்பரப்பலகையையும் சேர்த்துத்தான் கூறுகின்றேன்) பின்ஏன் தமிழியக்கத்தில் மதுரை பாடல் பெறவில்லை? பதறுதீர்கள். கீழே நான் தரும் விளம்பரப் பலகைகளின் பட்டியலைப் பாருங்கள்! அவை இங்கொன்றும் அங்கொன்றுமாகத் திரட்டப்பட்டனவல்ல. அந்த ஒரு தெருவில் ஒரு பகுதியில் தொடர்ச்சியாக உள்ள இருபத்தைந்து கடைகளின் பெயர்ப்பலகைகளில் உள்ள **தமிழ்** எழுத்துகள் இவை. படித்துப் பாருங்கள். கொட்டை எழுத்துகளில் தருகின்றேன்:

1. கௌஸ் சைக்கிள் ஸ்டோர்.
2. ராஜேஸ்வரி சில்க் பேலஸ்
3. சென்னை காதி வஸ்திராலயம்.
4. தமிழ்நாடு எலக்ட்ரிகல்ஸ்.

www.thamizham.net - Free E book No 7421

5. கிருஷ்ணு போட்டோ எம்போரியம்.
6. ரோஷன் கம்பெனி—
பேன்ஸி பேக் தயாரிப்பாளர்கள்.
7. பயனீர் சைக்கிள் ஹவுஸ்.
8. சீதாராம் ஸ்டோர்ஸ்.
9. முருகன் மெடிகல் ஸ்டோர்.
10. மதுரை ஹிந்து சரஸ்வதி நிதி லிமிடெட்.
11. ஆனந்தா காபி M. F. G. கம்பெனி
12. ஸ்ரீகிருஷ்ணு ரைஸ்மில்ஸ் ஸ்டோர்ஸ்.
13. வாணி ரெடிமேட் ஸ்டோர்.
14. கன்சல்டிங் சிவில் என்ஜினியர் கான்ட்ராக்டர்
அண்டு லைசென்ஸ்டு சர்வேயர்.
15. காந்திநிகேதன் கூட்டுறவு ஷாமார்ட் & மில் ஸ்டோர்ஸ்
16. A I லேடிஸ் பில்ஸ்.
17. எம். என். ராஜன் சைக்கிள் மார்ட்
18. ஸ்ரீ மீனுக்ஷி விலாஸ் நெய் ஸ்டோர்.
19. ஸ்ரீ லெக்ஷ்மி பவான்.
20. ஸ்டான்டர்டு வாட்ச் கம்பெனி.
21. காந்தி கிராமம் காதி பவனம்.
22. இந்தியன் காபி கார்னர்.
23. அசோகா சைகிள் & மோடார் கம்பெனி.
24. கண்டி கலைமகள் ஸ்டோர்ஸ்.
25. விவேகானந்தா ஹாண்ட்லூம் ஹவுஸ்.

—போதுமா? எப்படி......!? தமிழ் வளர்த்த மதுரையின் தமிழ்த் தெருவில் வழங்கும் தமிழ்! மேலே உள்ள பெயர்களெல்லாம் ஆங்கிலத்தை அப்படியே எழுத்துப் பெயர்த்தெழுதியவை (Transliteration) அல்ல. அப்படியே பார்த்து எழுதியவை. இங்குள்ள இருபத்தைந்து பெயர்களில் ஒன்றுகூட தமிழ்ப் பெயர் இல்லை. இருபத்திரண்டு ஆங்கிலத் தொடர்கள், மூன்று வடமொழித் தொடர்கள். இதுபோல் மதுரையில் எங்கோ ஒரு மூலையில் மட்டும் இருப்பதாக எவரும் கருதிவிட வேண்டா. அந்நகரில் உள்ள எல்லாத் தெருக்களிலும் இப்படித்தான். தமிழகத்தில் வேறு எந்த நகரிலும் ஊரிலும் இப்படி இல்லை. சிற்றூர்களானுலும் சரி, பேரூர்களானுலும் சரி. இடையிடையே ஓரிரண்டு பலகைகளாகிலும் தமிழில் தென்படுவதுண்டு. அங்கெல்லாம் இத்தனைக் கொடுமை இல்லை. ஆனுல் மதுரை வாணிகர்கள் ஒற்றுமையாகவே

www.thamizham.net - Free E book No 7421

இருந்து இப்படி வேண்டுமென்றே எழுதியிருக்கின்றார்களோ? அல்லது அங்கிருக்கும் வாணிகரில் ஒருவரும் தமிழர் இல்லையோ? அல்லது அவர்கள் ஒருவருக்கொருவர் போட்டியிட்டுக்கொண்டு தமிழை விழ்த்தப் புறப்பட்டு விட்டனரோ, தெரியவில்லை. மதுரையின் நீண்ட நெடுந் தெருக்களில் ஒரேயொரு பலகைகூட தமிழ்த் தொடரை எழுதியுள்ளதாக என் பாழாய்ப்போன கண்களில் படவில்லை. நானும் துடியாய்த் துடித்தேன். தெருத்தெருவாய் அலைந்தேன். நகர்ப்புறத்திற்கு வெளியே ஏதோ ஒன்றிரண்டு சின்னஞ்சிறிய கடைகளில் பார்த்ததாகமட்டும் நினைவு! மற்றபடி அங்கிங்கெனாதபடி எங்கும் சுடர்விட்டு விளங்குவது இத்தகைய இரண்டுங்கெட்டான் பலகைகள்தாம்!

இந்தப் பெயர்ப் பலகைகள் இங்கிருக்கும் தமிழர் கண்களில் படவில்லையோ, அல்லது உறுத்தவில்லையோ தெரியவில்லை. அல்லது இங்குள்ள **தினமணி** அலுவலகத்திற்குப் போய் "இனிமேல் 'ஸ்ரீ' போட்டு எழுதக்கூடாது; திரு போட்டுத்தான் எழுதவேண்டும்" என்று கூறி ஒரே நாளில் வெற்றிகண்ட மதுரை மாணவர்கள்தம் தமிழ் உணர்வெல்லாம் மழுங்கிப்போய் விட்டதோ தெரியவில்லை. அல்லது **'தமிழர் படை'** அமைத்த திருவாளர்கள் என்ன விளைவை எதிர்பார்த்து அப் படைப் பாசறையை அமைத்தார்களோ தெரியவில்லை. இல்லை- Madras State-ஐத் தமிழக அரசாக மாற்றியபின் மாதத்திற்கு நூறுமுறை அந்நகர்க்குப் போவதும் வருவதுமாக இருக்கும் **தமிழக அமைச்சர்கள்** ஒருவர் கண்களிலாகிலும் இந்தக் கோலமெல்லாம் பட்டதோ படவில்லையோ தெரியவில்லை. முதலமைச்சரின் ஒரேயொரு வேண்டுகோள் (எழுத்தால்கூட வேண்டுவதில்லை) போதுமே! வாணிகர்கள் எல்லாரும் கூடியிருக்கின்ற ஒரு விருந்திலோ, அல்லது விடுதியிலோ நேரம் பார்த்துக் குறிப்பாக வெறும் வாய்மொழியாகவே இத்தகைய வேண்டுகோளை விடுத்தாலும் உடனே செயலாற்ற எல்லாரும் (இந்த நிலையில்) முன் வருவார்களே! ஒருவேளை இந்த வம்பெல்லாம் நமக்கெதற்கு என்று எல்லாரும் கருதுகின்றார்களோ தெரியவில்லை.

இனி இந்நிலை நீடிப்பது தமிழகத்திற்கே பெரிய இழுக்கு. எனவே இந்த வேலையை **மதுரை மாவட்ட உலகத் தமிழ்க் கழகந்தான்** எடுத்துப் போட்டுக்கொண்டு செய்யவேண்டும். உடனடியாக இவ் வினைப் பாட்டை மேற்கொள்ளுதல் வேண்டும். உலகத் தமிழ்க் கழகப் பொதுச் செயலாளன் என்ற அளவில் இதைக் கட்டளை முறையாகச் சொல்லவில்லை; **தென்மொழி ஆசிரியன்** என்ற அளவில் வேண்டுகோள் முறையாக இதனைச் சொல்கின்றேன். இங்குள்ள நகர உ. த. க. கிளைகளும், வட்டக் கழகமும் உடனே கூட்டப்பெறுதல் வேண்டும். பொதுக்

www.thamizham.net - Free E book No 7421

கூட்டம் ஒன்றில் வாணிக விளம்பரப் பலகைகளைத் தமிழில் எழுத வேண்டும் என்று மதுரை வாணிகர்களைக் கேட்டுக்கொள்ளும் ஒற்றைத் தீர்மானத்தை நிறைவேற்றி, அத் தீர்மானத்தையும், வேண்டுகோளையும் சிற்றறிக்கைகளாக அச்சிட்டு மதுரையின் சந்து பொந்துகள் உள்பட எல்லாப் பெருந்தெருக்களிலும் உள்ள எல்லாக் கடைகளுக்கும் கொடுத்தல் வேண்டும். அவ்வறிக்கையில் கால எல்லை ஒன்று குறிக்கப்படுதலும் வேண்டும். அக்குறிப்பிட்ட காலத்திற்குள் "வாணிகர்கள் தம் விளம்பரப் பலகைகளை மாற்றவேண்டும்" என்று வேண்டுகோள் விடுத்தல் வேண்டும். மாற்றவே மாட்டார்கள் என்று எவரும் எதிர்பார்க்கக் கூடாது. அப்படி மாற்றவே முடியாது என்று எந்த வாணிகரும் கூற விரும்பமாட்டார்.

மதுரை போலும் பின்தங்கிய தமிழ் வாணிகர்கள் உள்ள பிற விடங்களில் உள்ள உ. த. க. கிளைகளும், தமிழ் மன்றங்களும் இதே வழியைப் பின்பற்றி முயற்சி செய்யலாம். தேவையான மொழி பெயர்ப்பை வாணிகர்களுக்கு எழுதி உதவலாம். கட்டாய முறையிலன்று; வேண்டுகோள் முறையிலேயே இத்தகு மாற்றங்களை உருவாக்கலாம். இத்துறையில் ஈடுபட்டு உழைக்கும் மன்றங்களையும் அன்பர்களையும் தென்மொழி வாழ்த்தி வரவேற்கின்றது, பாராட்டுரை வழங்கவும் காத்திருக்கின்றது. தமிழகத்திற்குள் தமிழ் விளைச்சலை ஏற்படுத்தாமல் பிற நிலங்களில் தமிழ் வளர்க்கத் துடிக்கும் தமிழர்கள் சிலரின் நினைவிற்கும் இந் நிகழ்ச்சியைக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

பேச்சாலும் எழுத்தாலும் பாட்டாலும்
கூத்தாலும் பிறர்உவக்க
ஒச்சுகவே மணிமுரசு! வீதியெலாம்
வரிசையுற உலவா நிற்பீர்!
ஏச்சாலும் எதிர்ப்பாலும் வருகின்ற
இன்னலுக்குள் இன்பவெள்ளம்
பாய்ச்சாதோ பொதுத்தொண்டு? பைந்தமிழ்க்குச்
செயுந்தொண்டு பருக வாரீர்! (-பாரதிதாசன்)



www.thamizham.net - Free E book No 7421

திருக்குறள் தமிழ்மரபுரைச் சிறப்பு-2.

தமிழ் இலக்கிய வுலகைப் பொறுத்த அளவில், உரையாசிரியர் இருதிறப் படுவர். அவர், முன்னர் உரையெழுதப் பெறாத நூலுக்கு முதன்முதல் உரையெழுதும் ஆசிரியரும், முன்னரே ஒன்றாகவோ பலவாகவோ உரைகள் எழுதப்பெற்றுள்ள ஒரு நூலுக்கு மேலும் ஓர் உரை தரும் ஆசிரியரும் ஆவர். இவ்வகையில் பரிமேலழகரும் பாவாணரும் ஒரு திறத்தவரே. பரிமேலழகர் தம் உரையுள் தமக்கு முந்திய உரையாசிரியர்தம் கொள்கைகளை யெல்லாம் மறுத்து எழுத வேண்டிய விடத்து, ஆங்ஙன் அவற்றுக்குத் தக்க கரணியங்களையும், தம் கொள்கைக்குரிய சான்றுகளையும் நூலளவையாகவும் கோளளவையாகவும் காட்டிப் போகவேண்டி யிருந்ததோ, அங்ஙனமே, பாவாணரும் பரிமேலழகரைச் சிறுபான்மை ஒட்டியும் பெரும்பான்மை வெட்டியும் போகவேண்டியிருந்த விடத்தெல்லாம் அவற்றிற்குரிய கரணியங்களையும் முறைப்பட விளக்கிப் போக வேண்டியிருந்தது. அதன்படி உரைசெய்யுங்காலையும் அவர் மூல நூலை,

"விட்டகல் வின்றி விரிவொடு பொருந்திச்
சுட்டிய சூத்திரம் முடித்தற் பொருட்டா
ஏது நடையினும் எடுத்துக் காட்டினும்
மேவாங் கமைந்த மெய்ந்நெறித் ததுவே"
(தொல்-பொருள்-மரபு-104)

என்று, தம் உரையைக் கொள்ளுமாறும்,

"மறுதலைக் கடாஅ மாற்றமும் உடைத்தாய்த்
தன்னூ லானும் முடிந்தநூ லானும்
ஐயமும் மருட்கையும் செவ்விதின் நீக்கித்
தெற்றென ஒருபொருள் ஒற்றுமை கொளீஇத்
துணிவொடு" *(ஷை-106)*

-நின்றும்,

"மரபுநிலை திரியின் பிறிதுபிறி தாகும்" *(ஷை-93)*

-ஆகையால்,

"மரபுநிலை திரியா மாட்சிய ஆகி" *(ஷை-95)*

"பல்பொருட் கேற்பின் நல்லது கோடல்
தொகுத்த மொழியான் வகுத்தனர் கோடல்
மறுதலை சிதைத்துத் தன்துணி புரைத்தல்" *(ஷை-112)*

www.thamizham.net - Free E book No 7421

–முதலிய தேர்ந்த உத்திகளைக் கைக்கொண்டு, மூலத்தின் நன்கு நின்றும்,

"உய்த்துக்கொண் டுணர்தலொடு மெய்ப்பட நாடி
... ...
மனத்தி னெண்ணி மாசறத் தெரிந்துகொண்டு
இனத்திற் சேர்த்தி உணர்த்தல்..." (சூ–112)

–செய்தும். தாம் மிகச்சிறந்த நுனித்தகு புலவர் என்பதைப் பல்லாற்றானும் மெய்ப்பித்துக் காட்டியுள்ளார்.

இனி, தமக்குமுன் உரை வரைந்தார் எல்லாருள்ளுஞ் சிறந்த வுரை வரைந்த பரிமேலழகர் தாம் ஓர் உரையாசிரியன் என்ற நெறி முறையினின்று பிறழ்ந்து, (1) ஆரியவழி காட்டல் (2) பொருளிலக் கணத்திரிப்பு (3) ஆரியவழிப் பொருள் கூறல் (4) ஆரியக் கருத்தைப் புகுத்துதல், (5) தென்சொல்லை வடசொல் மொழிபெயர்ப்பெனல் (6) தென்சொற்கு வடமொழிப் பொருள் கூறல் (7) சொற்பகுப்புத் தவறல் (8) சொல்வரலாற்றுத் தவறல் (9) சொற்பொருள் தவறல் (10) அதிகாரப் பெயர் மாற்றல் (11) சுட்டுமர பறியாதல் (12) இரு குறளைச் செயற்கையாக இணைத்தல் ஆகிய வகைகளில் வழுவியுள் ளாராகப் பாவாணர் காட்டியிருக்கின்றார்.

மேலும் பரிமேலழகர் தம் உரையுள் கூறிய,

1. அறமாவது மனு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும், விலக்கியன ஒழிதலுமாம், (உரைப்பாயிரம்)

2. ஒழுக்கமாவது அந்தணர் முதலிய வருணத்தார் தத்தமக்கு விதிக்கப்பட்ட பிரமசரிய முதலிய நிலைகளினின்று, அவ்வவற்றிற் கோதிய அறங்களின் வழுவா தொழுகுதல், (உரைப்பாயிரம்)

3. அஃது (அறம்) நால்வகை நிலைத்தாய் வருணந்தோறும் வேறுபாடு உடைமையின், சிறுபான்மையாகிய அச் சிறப்பியல்கள் ஒழித்துக் கூறப்பட்டது, (உரைப்பாயிரம்)

4 தீய சொற்களாவன வருணத்திற்கு உரியவல்லனவுமாம், (அதி–139)

5. மனு முதலிய அறநூல்களால் பொதுவாகக் கூறப்பட்ட இல்லறங்களெல்லாம் இவர் தொகுத்துக் கூறிய இவற்றுள்ளே அடங்கும், (குறள்–240)

www.thamizham.net - Free E book No 7421

6. வினை வயத்தாற் பஞ்சபூத பரிணமமாகிய யாக்கையைப் பொருந்தி நின்று அதன் பயனனுபவித்தல் எல்லா வருணத்தார்க்கு மொத்தலிற் பிறப்பொக்கு மென்றார், -(குறள்-972)

7. இது புணர்ச்சி பிரிவு என இருவகைப்படும். ஏனை இருத்தல் இரங்கல், ஊடலென்பனவோவெனின், இவர் பொருட்பாகுபாட்டினை; அறம், பொருள், இன்பமென வடநூல் வழக்குப்பற்றி யோதுதலான் அவ்வாறே அவற்றைப் பிரிவின்கண் அடக்கினார் என்க.

8 இனி அவை தம்மையே தமிழ் நூல்களோடும் பொருந்த, புணர்ச்சியைக் களவென்றும், பிரிவைக் கற்பென்றும் பெரும்பான்மை பற்றி வகுத்து, அவற்றைச் சுவை மிகுதி பயப்ப உலக நடையொடு ஒப்பும் ஒவ்வாமையும் உடையவாக்கிக் கூறுகின்றார்.

(-காமத்துப்பால்-முன்னுரை)

—முதலிய நூற்றுக்கணக்கான ஆரியச் சார்புக் கருத்துகளைப் பாவாணர் ஆங்காங்கே மறுத்து, அவ்வுரைகள் மூலநூலாசிரியர் கருத்துக்கு எவ்வெவ்வகையில் மாறுபட்டன என்பதை நூற் பகுதிகளாலும் வரலாற்று நிகழ்ச்சிகளாலும் நன்கு எடுத்துக் காட்டியுள்ள திறம் வியந்து பாராட்டுதற்குரியது. அங்ஙனம் அவர் மறுத்துக் கூறியுள்ள இடங்களுள் சில வருமாறு;

1. ஒழுக்க முடைமையாவது, அறத்திலும், கடமையிலும் வழுவா தொழுகுதல். -(தமிழ் மரபுரை-ஒழுக்கமுடைமை)

2. பரிமேலழகர் கூறிய ஓதல், படைக்கலம் பயிறல் என்பவை அரசன் கடமைகளே யன்றி அறமாகா. அவற்றை அறமெனக் கொள்வது ஆரிய முறையாம். மேலும் வேட்டல் என்பது தமிழரசர்க்குரிய தொழிலன்று. முதுகுடுமிப் பெருவழுதியும் பெருநற் கிள்ளியும் பல் யானைச் செல்கெழு குட்டுவனும் தம் பேதைமையால் ஏமாற்றப்பட்டே ஆரிய வேள்விகளை வேட்டனர் என அறிக. வேட்டலுக்குப் பகரமாக வேட்டஞ் செய்தலைக் கொள்க. -(தமிழ்மரபுரை—குறள்-384)

3. அரங்கு, வட்டு, கோட்டி என்னும் மூன்றும் தூய தென் சொற்கள் என அறிக...வடமொழியில் அரங்கு என்ற வடிவில்லை... 'அரங்கு' என்னும் வடிவிற்கும் வடமொழியில் வேரில்லை. நிறத்தை அல்லது சாயத்தைக் குறிக்கும் ரஞ்ச் (Ranj) என்னுஞ் சொல்லொடு தொடர்புபடுத்தி, தம் அறியாமையையோ அழுக்காற்றையோ காட்டுபவர் வடமொழியாளர்......வடமொழியாளர் கோட்டி என்னுஞ் சொல்

www.thamizham.net - Free E book No 7421

லேக் கோஷ்டீ (Gosth) என்று திரித்து, கோஷமிடும் (ஆரவாரிக்கும்) கூட்டம் என்று பொருளும் பொருட் கரணியமுங் கூறுவர். தமிழில் கோட்டி கொளல் என்பது அறிவு கொளுத்துதலே மேற்கொள்ளுதல் அல்லது அவைக்கண் உரையாற்றுதலைக்குறிக்குமேயன்றி ஆரவாரிப்புக் கூட்டத்தைக் கொள்ளுதல் என்று பொருள்படாது. அங்ஙனம் வடவர் கூறும் பொருளேயே கொள்ளினும், அன்றும் அது தென் சொல்லாகுமேயன்றி வடசொல்லாகாது... ...ஆரவாரிப்பது கல்லார் திரளும் கலகக் கூட்டமேயன்றி, ஆன்றவிந்தடங்கிய சான்றோரவையாகாது. -(ஷை-குறள்-401)

4. எல்லா நாடுகளிலும், அறிவுத்தொழிலார், ஆட்சித்தொழிலார், படைத்தொழிலார், வணிகத்தொழிலார், உழவுத்தொழிலார், பெருஞ்செல்வர் ஆகியோர் மேலோராகவும்; ஏவலர் (Peons) வண்ணார், மஞ்சிகர் (Barbers), பறம்பர் (Shoemakers), வீட்டுவேலைக்காரர், கூலிவேலைக்காரர்முதலியோர்கீழோராகவும் கருதப்படுவதியல்பே. திருவள்ளுவர் "பிறப்பொக்கு மெல்லாவுயிர்க்கும்" என்றும் "ஒழுக்கமுடைமை குடிமை" என்றும், கூறியிருத்தலால், மேற்பிறந்தார் கீழ்ப்பிறந்தார் என்னும் மன்பதைப் பாகுபாடு மேற்கூறிய நால்வேறு நிலைமை பற்றியதே யன்றி, பரிமேலழகர் உரைத்ததுபோல் ஆரிய முறைப்பட்ட பிரிவிக்குலப் பிரிவினையைத் தழுவியதாகாது. எடிசன் செய்தித்தாள் விற்போராகவும், தாலின் (Stalin) பறம்பராகவும் இருந்து, அறிவாலும் ஆட்சியாலும் மேன்மை பெற்றமை காண்க. ஆரிய முறைப்படி பறம்பன் ஆள்வோனாக முடியாது....... "உடலோடொழியுஞ் சாதியுயர்ச்சி" என்று ஒருவன் வாழ்நாள் முழுவதும் குலம் மாறாதிருப்பதாகப் பரிமேலழகர் கூறியிருப்பது ஆரிய நச்சுக் கருத்தாகும். -(ஷை-குறள்-409)

5. ... ..."இவைபற்றியல்லது பகைவர் அற்றந்தராமையின், இவையே பகையாவன என்னும் வடநூலார் மதம்பற்றிக் 'குற்றமே யற்றந்தரூஉம் பகை' யென்றும்... .. கூறினார்"-என்று பரிமேலழகர் தம் நச்சுக் கருத்தை இங்கும் புகுத்தினார். -(ஷை-குறள்-435)

6. அரசன், தன் ஆட்சியைக் குற்றமின்றிச் செவ்வையாக நடாத்துதற்கு, இயற்கை மதிநுட்பத்தோடு நூலறிவும் சூழ்ச்சித் திறனும் தூயவொழுக்கமுமுடைய பெரியோரைத் தன் அமைச்சராகத் துணைக்கொள்ளுதல்... ...பரிமேலழகர் "பேரறிவுடையராவர் அரசர்க்கும் அங்கங்கட்கும் மானுடத் தெய்வக் குற்றங்கள் வராமற் காத்

www.thamizham.net - Free E book No 7421

தற்குரிய புரோகிதர்” என்று இங்கும் தம் ஆரியநஞ்சு நிறைந்த நெஞ்சைக் காட்டியுள்ளார். -(ஷி-பெரியோரைத் துணைக்கோடல்)

7. இவ்வட நூற் பொருண்மையை யுட்கொண்டு இவரோதிய தறியாது, பிறரெல்லாம் இதனை உயிரெச்சமெனப் பாடந்திரித்துத் தத்தமக்குத் தோன்றியவாறே யுரைத்தார்” என்று பரிமேலழகர் இங்குந்தம் நஞ்சைக் கக்கியிருக்கின்றார். மூவேந்தராட்சி படைப்புக் காலந்தொட்டு மேம்பட்டு வருவதென்று இவரே வேறோரிடத்திற் கூறியிருந்தும், பாட்டி பேர்த்தியிடமிருந்து நூல்நூற்கக் கற்றுக் கொண்டாள் என்பது போல, தமிழவேந்தர் பிற்காலத்தாரியரிடம் அரசியல் திறங்களை அறிந்து கொண்டார் என்பது தன் முரணேதே.
-(ஷி-குறள்-501)

8. “அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ் செந் தண்மை பூண்டொழுகலான்” என்று பிராமணரை விலக்கியதால், இங்கு அந்தணரென்றது தமிழ அறிஞரையே........

“அந்தணர்க் குரித்தாய வேதத்திற்கும் அதனுற் சொல்லப்பட்ட அறத்திற்கும் காரணமாய் நிலைபெற்றது ......செங்கோல்” “அரசர் வணிகரென்னு மேனையோர்க்கு முரித்தாயினும், தலைமைபற்றி அந்த ணர் நூலென்றார்” என்பன பரிமேலழகரின் ஆரியப் பிதற்றல்கள்.
-(ஷி-குறள்-543)

9. பரிமேலழகர் அறுதொழிலோரைப் பிராமணராகக் கொண்டு அவ்வழுவை இருமடியாக்க அவரை அந்தணர் என்னுஞ் சொல்லாற் குறித்து, “அறுதொழிலாவன: ஓதல், ஓதுவித்தல், வேட்டல்; வேட்பித்தல், ஈதல், ஏற்றலென விவை. பசுக்கள் பால்குன்றியவழி அவி யின்மையானும், அது கொடுத்தற்குரியார் மந்திரங் கற்பமென்பன ஓதாமையானும், வேள்வி நடவாதாம்; ஆகவே வானம் பெயலொல்லா தென்பதாயிற்று.” என்று தம் ஆரியநஞ்சை வெளிப்படுத்தியுள்ளார். திருவள்ளுவர் தமிழறத்தையே இங்கு எடுத்துக் கூறுதலானும் ஆரிய முறையைக் கண்டித்தலானும், பிராமணர் வேதமோதுதலையும் வேள்வி வளர்த்தலையும் பருவ மழைக்குக் கரணியமாகக் கூறினரென் பது பச்சைப் பொய்யாம்.

“இயல்புளி ... ... தொக்கு” (குறந்-545) என்றும்

“முறைகோடி ... ... பெயல்” (குறள்-559) என்றும்,

www.thamizham.net - Free E book No 7421

நூறாசிரியம்

துரைமாணிக்கம்.

பாட்டு—உக.

மறவி வாழியோ! உறவின் நெருங்கிக்
கரவின் மொழிவாங்கிக் கதுமென் புறமாறும்
பொய்தோய் நெஞ்சத்துப் புரையோர் கேடும்,
தவலறு பேதைமைத் தகவோர் தவறும்,
கவலறு கட்டுரை கடிதின் தந்து
நிலையின் நீங்கி நிறைகெட நெகிழ்க்கும்
விலைமாறு வினைகொள் வீணர் ஓதையும்,
முந்நீர் உலகத்து மூண்டுயிர் மேவலால்
உட்பகை நொதியும் உளத்தோர் தீமையும்—
எட்பக வேனுமெம் முளம்பதி யாமல்
கதிர்க்கைப் பனியாக் கடுகிச்
சிதர்க்கை உகலும் செய்கை யானே!

(முன்பக்கத் தொடர்ச்சி)

செங்கோலாட்சியே பருவமழைக்கும் கரணியமென்று ஆசிரியர் தெளிவாகக் கூறியிருக்கவும், அதை மறுத்து ஆரிய வேதவேள்வியே அதற்குக் கரணியமென்று பரிமேலழகர் உரைக்க இடந்தந்தது தமிழர் அடிமைத்தனமே யன்றித் தமிழர் கொள்கையன்று......கொடுங்கோலால் மழை பெய்யாமையும் மழை பெய்யாமையால் ஆபயன் குன்றலும் ஆபயன் குன்றலால் அறுதொழில் (உழவு, தொழிலே, வரைவு, வாணிகம், விச்சை, சிற்பம், என்றித் திறத்து அறுதொழில்—திவாகரம்) நடவாமையும் ஆக ஆசிரியராற் கூறப்பட்ட நிகழ்ச்சித் தொடரை, பரிமேலழகர் தலைகீழாக மாற்றி, ஆபயன் குன்றலால் வேள்வி நடவாமையும், வேள்வி நடவாமையால் மழை பெய்யாமையும் என வலிந்து கூறியிருத்தல் காண்க. -(ஷை-குறள்-560)

(தொடரும்)

www.thamizham.net - Free E book No 7421

பொழிப்பு:

மறவியே நீ வாழ்வாயாக! உறவினர்போல் நெருங்கியிருந்து கள்ளத்தினராய் யாம் கூறும் உள்ளுறை உண்மைகளை மொழியக் கேட்டுச் செவிகளால் வாங்கி, அவற்றைப் புறத்தேபோய் விரைந்து பிறர்பால் உரைபோக்கும், பொய்ம்மையே தோய்ந்து நிற்கும் நெஞ்சினையுடைய கீழ்மையினோர் செயத்தகும் கேடுகளும், குற்றமற்ற பேதைமையால் தக்கவர் செய்யும் தவறுகளும், கவலையைப் போக்கும் நீண்ட உரைகளால் விரைந்து உறுதிகூறி, அவ்விடத்தே நின்று நீங்கிய அளவினுனே தமக்குற்ற பெருமை கெடுமாறு அவ்வுறுதியை நெகிழ்வித்துத் தாம்கொண்ட கடமைகளை பிறரிடத்துத் தாம்பெறும் நலன்களுக்கு விலையாக மாற்றிக்கொள்ளும் புல்லிய வினைப்பாடுகளைக் கொண்ட வீணர்தம் ஆரவாரங்களும், முப்புடையும் நீர் சூழ்ந்த இவ்வுலகின் வந்து பொருந்தி உயிர்ப்புற்று மாந்தத் தோற்றத்தொடு மேவுகின்றாராய் உள்ளே கொண்ட பகை நாளுக்குநாள் ஊறிப் புளிப் பேறும் தன்மை கொண்ட நெஞ்சினோர் செய்கின்ற தீமைகள் தாமும் ஓர் எள்ளின் பிளவுத்துணையேனும் எம் உள்ளத்தே தங்கியிராமல், கதிரவனின் சுடர்க்கைகளின் முன் முட்டமிட்ட முடுபனி விரைந்து சிதர்வுற்று அழியுமாறுபோல் செய்யும் செய்கையால்!

விரிப்பு: இப்பாடல் புறத்துறையைச் சார்ந்தது.
மாந்தருக்குள்ள மறவியை வாழ்த்துவதாகும் இப்பாடல்.
மறவி–மறதி.

'நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன்'—என்று திருவள்ளுவர்

மறவியைக் கெடுகின்றார்தம் தன்மையுள் ஒன்றாகக் குறிப்பர். கல்வி நலனைப் பொறுத்த அளவில் மறவி கடியவேண்டிய தன்மைகளுள் ஒன்றாகக் குறிக்கப் பெறினும் பிறர் செய்யும் தீங்குகளையும் நமக்கு இயல்பான் வந்து பொருந்துகின்ற துன்பங்களையும் பொறுத்த அளவில் மறவி மாந்தத் தன்மைக்குத் தேவையானதொரு தன்மையராய் பாராட்டப் பெறுகின்றது.

பொறுத்தல் இறப்பினை என்றும்; அதனை
மறத்தல் அதனினும் நன்று. —என்னும் குறளில்

மறவி பாராட்டப்பெறுதல் காண்க.

www.thamizham.net - Free E book No 7421

ஈண்டுக் குறிக்கப்பெறும் இப்பாடலும் அத்தகைய மறதியைப் பாராட்டிப் புகழ்வதோடு, அது செய்ய வேண்டிய வினைப்பாடுகளை யும் எடுத்துக் கூறுகின்றதாக அமைந்துள்ளது.

"ஏ, மறதியே! உறவினர்போல் நெருங்கிக் கரவுள்ளத்தினராய் நம்பால் பெற்ற மொழிகளைப் புறத்தே மாறியுரைக்கின்றாராய்ப்பொய்த் தொழுகும் புரையோர் செய்யும் கேடுகளையும், தவறு நினையாதவர் ஒரோவொருகால் செய்யும் பேதைமை சான்ற செயல்களால் வரும் தவறுகளையும், நாம் நம்பத்தகுந்த அளவு உறுதிமொழிகளை எளிதே கூறிப் புறத்தே போய் அவர்க்கு நன்மை வந்தவிடத்து நிலைமாறிக் கொள்ளும் நெகிழ்ந்த மனங்கொண்டவர்களின் அசைநிலைகளையும், மாந்தர் உருவினராகி நம்பால் உட்பகை கொண்டொழுகும் உளத்த வர் செய்கின்ற தீமைகளையும், ஓர் எள்ளைப் பகிர்ந்த சிறிய அளவே னும் நம் உள்ளத்தில் நிலைத்து நில்லாமற் செய்து, அவற்றைப் பனி மூட்டத்தைச் சிதர்க்கும் பகலவனைப்போல் அழித்துவிடும் தன்மை பொருந்திய உன் செயலுக்காக, நீ வாழ்வாயாக"-என்று பாராட்டிக் கூறுவதாக அமைந்ததிப் பாடல்.

துன்பங்களுக் கேதுவாகிய குற்றங்களையும் அவற்றை விளைவிக் கும் மாந்தர்தம் வினைப்பாடுகளையும் மறந்து போகாமல் எண்ணத்தி லேயே வைத்திருப்பதால், அத்துன்பச்சுமை மேலும் மேலும் பெருகுவ தல்லால் குறைவதில்லை. ஆகலின் அத்துன்ப ஏதுக்களை மறந்து போவதே நாம் நம்மை இன்பத்தின்பாலும் அமைதியின்பாலும் வழி நடத்திச் செல்லும் வகையாகும் என்பதை உணர்த்துவதே இப்பாட லின் நோக்கம்.

உறவின் நெருங்கி—உறவுபோல் நெருங்கியிருந்து.

கரவின் மொழிவாங்கி—கரவு நிறைந்த உள்ளத்தோடு பிறர் கூறுகின்ற மொழிகளை ஒன்றுவிடாது உள் வாங்கி. இயல்பாக மொழிவதை மட்டுமன்றி, மொழியலாகாத பிறவற்றையும தம் கரவு சான்ற மொழிகளால் மேலிட்டு வாங்கி. நாம் கொடுப்பது அன்றித் தாமே வருவித்துக் கொள்ளலால் வாங்கி எனலாயிற்று.

கதுமென—விரைவு என, விரைவாக. வாங்கியவுடனே புறமாறு தலால் கதும் எனும் மிகுவிரைவுக் குறிப்பு குறிக்கப்பட்டது.

புறமாறும்—புறத்தே விலைபோக்கும். மாறுதல்-விலைபோக்குதல். முல்லை மாறி—கற்பை விலைபோக்குநள். முல்லை—கற்பு.

www.thamizham.net - Free E book No 7421

பொய்தோய் நெஞ்சம்—பொய்ம்மை தேங்கி உறைந்த நெஞ்சம். தோய்தல்—உறைதல் (எ-டு) தயிர்தோய்ந்தது. பொய்ம்மைதோயாது நீர் போல் நிற்பின் ஒருகாலத்தே அதனைவடிவித்தலும் கூடும். ஆகையால் அவ்வாறு வடிவித்தலும் கூடாமைப் பொருட்டுத் தோய்ந்து கிடக்கும் நெஞ்சம் எனலாயிற்று.

புரையோர்—கீழ்மையோர், நிறையற்றவர், உள்ளீடற்றவர். புரை—உட்டுளை. பொள்—துளை-; பொள்-புள்-புளை-புழை-புரை உள் தங்கும் நெஞ்சினரல்லாமையின். ஒருபுறம் வாங்கிய மொழிகளை மறுபுறத்தே ஒழுகவிடுந் தன்மையோர்.

தவலறு பேதைமை—குற்றமற்ற பேதைமை.

தவல்—குற்றம். தவ—நிறைவைக் குறிக்கும் ஓர் உரிச்சொல். மிகுதிப் பொருள்தரும் ஒரு முன்னிலை. (எ-டு) தவப்பெரிது-மிகப் [பெரிது.

தவ + அல்-தவல்-மிகுதியல்லாதது; குறைவானது-குற்றமுடையது.

குல்—குர்—குறு—குறுமை; குறு—குற்று—குற்றம்;-குறு-குறை

குல்-குன்-குறு-குன்னு-குன்று-குன்றல்.

தகவோர் தவறு: தக்கவர் சிற்சிலகால் செய்யும் தவறு.

குற்றம் செய்தல் வேண்டும் என்ற கருத்தின்மையால் ஒரோ வொருகால் செய்யப்பெறும் தவறு. அவை அவ்வப்பொழுது சிற் சில கேடுகளைப் பயப்பினும் அறியாமையால் செய்யப்பெற்றன வாகையால் அவை பொறுத்தற் குரியனவும் மறத்தற்குரியனவு மாம் என்பது.

'பேதைமை ஒன்றோ பெருங்கிழமை என்றுணர்க
நோதக்க நட்டார் செயின்—என்பது குறள்

கவலறு கட்டுரை: கவலையைப் போக்குகின்ற நெடிய உரை. கட்டி உரைக்கப்படுதலால் கட்டுரை. கட்டிவுரைத்தல்-மேன் மேற் தொடர்புபடக்கோத்து உரைத்தல்.

கடிதின் தந்து: விரைந்து தந்து.

துன்ப மேலீட்டால் கவலுற்றகாலை அத் துன்பம் போக்கும் உறுதியுரைகளை விரைந்து தந்து.

நிலையின் நீங்கி- தம் நிலையினின்று நீங்கி.

நிறைகெட நெகிழ்க்கும்: தம் நிறைநிலை கெடுமாறு இடை யூழ்த்தும் உறுதியுப்பதாஞ் சொற்களை விரைந்து தந்தவர். தம்

www.thamizham.net - Free E book No 7421

பெருமை கெடுமாறு அவற்றைப் புறத்தே போய்க் கைதாளர்க்கும்.

விலைமாறு வினைகொள் வீணர் ஓதை: நம் துன்பத்திற் கேதுவாயவற்றைக் களைய விரும்பிய செயல்களைத் தம் இன்பத்திற்கென விலைபோக்குகின்ற புல்லிய வினையை உடைய வீணர்களின் ஆரவாரம். கூறிய உறுதிமொழிகளும் அவற்றிற்குரிய காலமும் அவற்றின்மேல் கொண்ட நம்பிக்கைகளும் வீண் என்று கருதுமாறு செய்ததால் வீணர் எனப்பட்டனர். அவ்வுறுதிமொழிகளும், அவற்றின் மேற்கொண்ட நம்பிக்கையும் பயனின்றிப் போனமையால் அவை வெறும் ஆரவாரமென்று கொள்ளப்பட்டன.

ஓதை-ஓசை-ஆரவாரமிக்க பொருளில் வெற்றொலிகள்.

முந்நீர்உலகம்: கடலால் சூழப்பெற்ற உலகம் முந்நீர்-கடல் ஊற்று நீரும், ஆற்றுநீரும், மழைநீரும் சேர்ந்த தொகுதியாகையால் முந்நீர் என்பது கடலைக் குறித்தது.

முண்டுயிர் மேவலால்: முளுதலுற்ற உயிர் உடம்பொடு மேவி இருத்தலால், உயிர் உடம்பொடு பொருந்தி இருத்தல் பற்றியே மாந்தப் பிறவி என்று திரிதரலால்; மாந்தப்பிறவி பிற உயிர்ப் பிறவிபோல் அன்றி, உட்பகையற்று வாழவேண்டிய தொன்றாக விருந்தும், அப் பிறவியெடுத்தும் பிற விலங்குகள் போலும் சிற்றுயிரினங்கள்போலும் உட்பகை கொண்டு வாழ்கின்ற தன்மையினர் சிலர் என்பது.

உட்பகை நொதியும் உம்த்தோர்: உட்பகை என்னும் நீரில் ஊறிக்கிடக்கின்ற உளத்தை உடையவர்.

உட்பகை கொண்டவர் மேலும் மேலும் பொறுமை கொண்டவராகி பகை வலுக்கவே இருப்பாராகலின் பகைநொதிகின்ற உள்ளம் உடையவர் எனக் கூறப்பெற்றது.

எட்பகவு: எள்ளைப் பிளந்த அளவு.

உளம் பதியாமல்: உளத்தே நினைவிற் பதிவுறாமல்.

கதிர்க்கை பனியா: கதிரவனின் சுடர்க்கைமுன் பனிபோல்.

கடுகி: விரைந்து.

சிதர்க்கை உகலுதல்: சிதர்ந்து அழித்தல்.

பிறர் செய்யும் தீங்குகளை உடனடியாக மறந்துபோதல் என்பது நாகரிகம் பொருந்தியதொரு நல்ல பண்பு. அவ்வாறு மறவாவிடத்து அத்தீங்குகளால் ஏற்படும் மனவுளைவும், அவற்றைச் செய்தாரிடத்து நாம் காட்டும் வெறுப்புகளால் அவர் மேன்மேலும் பகைகொண்டு செய்யும் தீமைச் செயல்களால் பல்வகையான இடர்ப்பாடுகளுமே மிகுமல்லாது, அவரால் நேர்கின்ற துன்பங்கள் ஒழிந்து போகாவென உணர்த்துவதாகும் இப்பாட்டு.

இது பொதுவியலென் திணையும், முதுமொழிக்காஞ்சி என் துறையுமாகும்.

www.thamizham.net - Free E book No 7421

தி. பி. 2000 சிலைத்திங்கள் கஉ-ஆம் நாள் (ஞாயிறு) அன்று பறம்புக்குடியில் நடைபெற்ற உலகத் தமிழ்க் கழக முதல் மாநாட்டில் பாவலர் திரு. பெருஞ்சித்திரனார் நிகழ்த்திய

பாட்டரங்கத் தலைமையுரை.

முன்னுரை:

பெயரா வியற்கைப் பெருவானும், வானத்(து)
அயரா தியங்குகின்ற ஆர்கதிரும் விண்மீனும்
திங்களும் கோளும் திரிகின்ற செம்போக்கும்
எங்குமோர் ஆற்றல் இருக்கின்ற மெய்ம்மையும்
உள்ளத் திருத்தி உறுபொருளை ஆங்கிருத்தி
தெள்ளத் தெளிந்தநறுந் தீந்தமிழாய் ஊற்றெடுக்கும்
வெள்ளத் துணர்வை விரித்துரைப்பேன்; செம்புலவர்
கொள்ளத் தகுமளவோர் குன்றிமணி ஆனாலும்
செந்தமிழ்த்தாய்க் கேற்ற செழும்பொன் மணியென்றே
எந்தமிழைப் பேண இறைஞ்சி வணங்குகின்றேன்!

பேரறிவு சான்ற பெரியோரே! தாய்மாரே!
ஆர்தலுறும் செந்தமிழ அன்பரீர்! நல்லிளைஞீர்!
பாட்டரங்கம் ஏறவந்த பாவலர்காள்! நும்மைதமிழ்ப்
பூட்டறுக்க வந்தவர்போல் போற்றிவர வேற்கின்றேன்.
செந்தமிழைப் பாடுதற்குச் சேர்ந்தொருங்கே வீற்றிருப்போம்
எந்தமிழை நாம்பாட என்னதிறன் பெற்றுவிட்டோம்?
அன்றுதிரு வள்ளுவனார் ஆன்ற திருக்குறள்போல்
ஒன்றுசெய்ய வல்லோமா? ஓங்குயர்ந்த நற்சிலம்பு
மேகலைபோல் தெய்வத் திருமூலர் மந்திரம்போல்
சாகாப் பெருநூல்கள் சாயலிலே நாமொன்று
செய்யதிறன் பெற்றோமா? இல்லெனினும் செந்தமிழ்க்கே
வெய்யபகை தானும் புறத்தே வெருட்டினமா?

செந்தமிழ்க்கு வந்தபகை மாய்த்திடவே சேர்ந்தமெனத்
தொந்தோம்தொந் தோமெனவே துள்ளிக் குதிப்பதல்லால்
எந்தப் பகைகளைந்தோம், எல்லாரும் உட்பகைத்தோம்!
சொந்த நலங்கண்டோம்; சொந்த இனமறந்தோம்!
வாழ்கதமிழ் வாழ்கதமிழ் என்றபடி வாழ்த்திவிட்டு
"வாழ்வதற்கே என்ன வகைகிடைக்கும்" என்றெண்ணி
நன்மை கிடைக்குமெனில், நாற்காசு சேருமெனில்,

www.thamizham.net - Free E book No 7421

புன்மையொடு புன்மை புகுவதுபோல் தொண்டுசெய்யப்
போகின்றோம் நாமும்; புதுமையென்ன நாட்டிவிட்டோம்!
ஆகும் வினையில் அணுவளவும் செய்தோமா?

எத்தனையோ கட்சி, கழகமென்றும் மன்றமென்றும்
எத்தனையோ பேச்சு! எழுத்தெல்லாம் தீப்பறக்கும்;
எத்தனையோ தீர்மானம்! எத்தனையோ மாநாடாம்!
அத்தனைக்கும் இன்னபயன் என்றே அளந்துரைக்க
யாரேனும் உள்ளாரா? யாக்கைக்கு மெய்யென்று
கூறி அழைத்ததுமே கூற்றை உதைத்துவிட்டோம்
என்ற தருக்கும் செருக்கும் இருக்கட்டும்!
இன்றளவில் நாம்கண்ட தென்ன அளவிருக்கும்!
பொய்முட்டை ஒன்றால் புளுகுமுட் டையல்லால்
மெய்முட்டை என்ன விளைவிருக்கும், மேதகையீர்!

நாடெல்லாம் மாநாடு! நாள்தோறும் பாட்டரங்கம்!
வீடெல்லாம் ஊரெல்லாம் வெற்றி விழாக்கூட்டம்!
வானொலியில் பாட்டரங்கம்! வாய்கிழிக்கும் சொல்லரங்கம்!
வீணுக்குக் கைத்தட்டல்! வீழ்கின்ற பூமாலை!
"ஆகாகா! செந்தமிழ்க்கே ஆக்கமிது ஆக்கம்" எனும்
வேகாத பேச்சுகள்! வீழ்த்துகின்றோம் பல்கோடி!

நீண்டதொரு துண்டு! நிலம்பெருக்கும் மெல்வேட்டி!
ஆண்ட தமிழ்ச்சொல் அடுக்கிவைக்கும் சொற்சுவர்கள்!
என்னே தமிழ்வளர்ச்சி! என்னே புகழ்மாலை!
என்னே தமிழன் இருந்தநிலை!—என்றுரைத்துத்
தம்முதுகில் தாமே தடவித் தருங்காட்சி!
அம்மவோ! ஒன்றிரண்டா! அன்றாட வாழ்க்கையிது!

இன்றிந்தச் சூழலில்தான் நாமும் இருந்துகொண்டு
வென்று குவிப்பதுபோல், வெற்றிபல சாய்ப்பதுபோல்
பாட்டரங்கம் கூட்டிவிட்டோம்; பாடுகின்ற நேரமிதா?
நாட்டரங்கில் நம்பெயரோ நல்லடிமை! நாம்கொண்ட
வல்லடிமைத் தன்மைக்கு நல்லுணர்வு வந்துவிட்டால்
இல்லடிமை நீக்கி எழுந்தோன் தாழுமுன்னர்
வேட்டரங் கங்காண வேண்டுமல்லால் இஃதைப்போல்
பாட்டரங்கம் பாடிப் பயனென்ன பைந்தமிழீர்!

பாவேந்தர் போர்ப்பாட்டுப் பாடியது போதாதா?
மூவேந்தர் கூட்டிவைத்த முக்கழகம் போதாதா?

www.thamizham.net - Free E book No 7421

எல்லாம் இருந்தும்நாம் இன்றுமெழ வில்லையெனில்
நல்ல அடிமைநலம் நாம்சுவைத்து வந்தகுறை!
இன்றுமுதல் நாம்செய்யும் எந்தவினைப் பாட்டுக்கும்
ஒன்று, பயன் வேண்டும்; இன்றேல் ஊமைத் தனம்வேண்டும்!

"பாட்டரங்கம் கேட்டவொரு கோழை புடைத்தெழுந்தான்;
நீட்டுவாள் தூக்கியவன் நெற்றிக்கு முன்னிறுத்தி
ஏடா தமிழ்ப்பகையே! என்னநீ சொல்கின்றாய்!
கூடா? உயிரா? எதுவேண்டும் கூறென்றான்"—
என்றோர் கதைநிகழ்ந்தால் இத்தகைய பாட்டரங்கால்
முன்னோர் விளைக்கா முழுப்பயனும் வாய்த்ததென்பேன்!
அவ்வுணர்வை ஊட்டாத பாட்டாலே ஆவதென்ன?
இவ்வரங்கும் அந்த எழுச்சியிலோர் எள்முனையே!

இக்கால் இலக்கியமும் சொற்பொழிவும் எங்ஙனென்றால்
முக்காலும் பொய்ப்படியில் மூழ்க்கிக் கவிழ்த்தளந்து
மெய்யாய் அளந்தமென மெய்யடித்துச் சொல்லுவதாம்!
உய்யாது நின்றென்ன? உய்ந்தென்ன? போயென்ன?
நம்பிழைப்பு நன்றாய் நடந்துவரும் என்றாலோ
கும்பிக்குக் கேடில்லை என்றறிந்து கொண்டாலோ
எப்படியும் பாடலாம்! எப்படியும் பேசலாம்!
எப்படியும் தாளில் எழுத்தெழுத்தாய்த் தீட்டலாம்!
அப்படியே நாமுமதை ஆமாமாம் என்றுசொல்லி
ஒப்படிக்கு மேல்படியில் ஒன்றிரண்டு மேலேறி
நின்றால் பிழைக்கலாம்; நிற்கவில்லை என்றாலோ
என்றுமே ஏற்றம் இருக்காதே! இன்றெல்லாம்
மானத்தை விட்டால் மறுநொடியில் நற்பதவி!
ஏனம் நிறைய, இடுகின்ற வாய்நிறைய
வெண்சோறு! வெள்ளைஉடை! வேளைக்குப் பால்பழங்கள்!
மண்தரையில் கால்படுமா? போக மகிழுந்து!
வேறென்ன வேண்டும்? தமிழால் எதுவேகும்?
சேறு குழம்பிடுமா? செந்நெல் விளைந்திடுமா?

ஆகவே தமிழ்வளர்ச்சி என்பதெல்லாம் ஆர்ப்பரிப்பே!
ஈகம் பொதுத்தொண்டிங் கென்பவெல்லாம் ஏய்ப்பதுவே!
இன்றைக் கிருக்கும் நிலையிதுவே! இந்நிலையிற்
குன்றைத் தகர்க்கக் குறிவைத்துப் பாடுகின்றோம்!
பொய்புளுகு முட்டைகளைப் பொத்தலிட்டுப் பார்க்கின்றோம்!
செய்பயனை நம்பியுள்ளோம்! செல்வத்தை எண்ணவில்லை!

www.thamizham.net - Free E book No 7421

தன்னறிவும் தன்திறனும் அல்லால் துணையில்லை
முன்னறிவும் உண்டெனினும் உட்பகையும் முள்வதுண்டாம்!
ஏதோ முனைந்துவிட்டோம்! ஏதோ இணைந்துவிட்டோம்!
காதோடு காதாகக் கசமுசப்பு கேட்டாலும்
ஒன்றுபட்டு விட்டோமென் றூர்முழங்க வந்துவிட்டோம்!
நன்றுபட வாழ்வோம்நாம்; அல்லால் நயந்திரவோம்!

எங்களுடை வாழ்வும் இனிமேல் வருஞ்சிறப்பும்
தங்குதமிழ் ஒன்றே! தனித்துணையும் அஃதொன்றே!
எங்கள் தனிக்குலமும் எங்கள் பெரும்புகழும்
மங்காத் தமிழ்ஒன்றே! மாயாத வாழ்வதுவே!
அந்தத் தமிழே அனைத்துச் சிறப்புக்கும்
உந்துகின்ற வல்லிசையாய், ஊறும் அரத்தமாய்
நாடி நரம்பாய், நலமிக்க ஊன்தசையாய்
ஆடி அசைக்கும் அரசாணைக் கொம்பொலியாய்
வீற்றிருக்கக் காண்கின்றோம்! வேறியக்கம் கண்டதில்லை;
மாற்றுரைகள் கேட்டதில்லை; மண்ணில்வே றுக்கமில்லை;
வாழ்க்கைவே றில்லை; வளத்துக்கு வாய்பிளக்கோம்!
பூழ்க்கைப் புகழ்ச்சிக்குப் பொக்காய்ப் பறந்துவரோம்!
செல்வம் செருப்பு! சிறப்புக்குச் செக்காகோம்!
வெல்வ துறுதி! விளை(வு)அதற்கு மேலுறுதி!
அந்த உறுதிக் கணிவகுத்த பாவலர்யாம்!
எந்தப் புகைக்கும் பகைக்கும் இடமில்லை!

எந்தமிழின் ஏற்றம் எடுத்துரைக்க வந்தோம்யாம்!
செந்தமிழின் எண்மைச் சிறப்புரைப்பார் எண்புலவர்!
இந்தவுல கத்தரையில் ஏந்தும் மொழிக்கெல்லாம்
செந்தமிழே தாய்மைச் சிறப்புப் பெறுவதுவாம்!
செந்தமிழே தூய்மைச் செழுமை பெறுவதுவாம்!
செந்தமிழே நல்லினிமை சேர்ந்து வழங்குவதாம்!
செந்தமிழே வேறு கலவாத் தனிமையதாம்!
செந்தமிழே என்றும் புதுமை சிறப்பதுவாம்!
செந்தமிழே என்றும் பழமை திகழுவதாம்!
செந்தமிழே சொல்வளமை சேர இயல்வதுவாம்!
செந்தமிழே நல்லிளமைச் செவ்வி கொழுவியதாம்!

அந்த வகையெல்லாம் அறிவும் அழகுமிகக்
கூறி உணர்வு கொளுத்துதற்கே பாப்புலவர்
ஏறி இருக்கின்றார் பாட்டரங்கம்! இன்னோர்

www.thamizham.net - Free E book No 7421

உரைக்கும் தமிழ்ப்பாட்டில் உண்மை இருக்கும்!
கரையற்ற நீர்க்குக் கரைபோல யாப்பிருக்கும்!
இன்பத் தமிழிருக்கும்! ஏற்றம் குறைந்தார்க்குத்
தென்பிருக்கும்! சொல்லில் தெளிவிருக்கும்! நீங்களெல்லாம்
கேட்கின்ற பாட்டரங்கில் கேளாச் சுவையிருக்கும்!
வேட்கின்ற செந்தமிழும் விறிவரும் நல்லுணர்வும்
சொல்லுக்குச் சொல்லிருக்கும்! சொல்லில் பொருளிருக்கும்!
பல்லுடைக்கும் எங்கள் தனித்தமிழ்தான் என்பார்க்கே
ஏற்ற மருந்திருக்கும்! எம்வழியில் அன்னவரை
மாற்ற வகையிருக்கும்! மற்றவர்க்கும் வாய்ப்பிருக்கும்!
மற்றே இனியிருக்க வேண்டுவதென் னென்றுலோ
சற்றேனும் நீங்கள் அமைந்துசெவி சாய்ப்பதுவே!

பாவலர்கள் பாடி முடித்தவுடன் பாட்டரங்கில்
ஆவலுடன் நீங்கள் அமைதியுடன் வீற்றிருந்தால்,
பின்னுரையில் செந்தமிழர் பீடுறவே இன்றுவரை
மன்னுந் தமிழ்மொழியின் மாண்புரைக்க எண்ணுகின்றேன்.
அன்பர்கள் எல்லாம் அமர்ந்திருக்க வேண்டுகின்றேன்.
இப்பொழுது செந்தமிழின் எண்மைச் சிறப்புரைக்க
ஒப்பும் புலவோரை ஒவ்வொருவ ராய் அழைப்பேன்.
முப்பாலும் ஆய்ந்த முதுபுலவோர் வீற்றிருக்க
தப்பாமல் வாழுந் தமிழ்! (தொடரும்)

மொழிப்பேரறிஞர். தேவநேயப் பாவாணரின்
திருக்குறள் தமிழ் மரபுரை
விலை உரு. 15-00
கிடைக்குமிடம்- திரு. தே. மணி,
ஆ-1135, இரண்டாம் மேற்குக் குறுக்குச்சாலை,
காட்டுப்பாடி விரிவு (வ, ஆ.)

பாவலர். பெருஞ்சித்திரனாரின்
அரிய தமிழ் நூல்கள்

			உரு.	காசு.
1.	பாவியக்கொத்து	விலை	2 —	50
2.	எண்சுவை எண்பது	,,	1 —	50
3.	புரட்சிப்பாவலர் பாரதிதாசன்	,,	0 —	50

அஞ்சற் செலவு தனி.
கிடைக்குமிடம்:- தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.

www.thamizham.net - Free E book No 7421

ஈ. வே. இரா. பெரியாருக்குப் பாவாணர் விடுக்கும் வெளிப்படை வேண்டுகோள்.

தமிழ்நாட்டுத் தந்தை ஈ. வே. இரா. பெரியார் அவர்கட்கு ஞா. தேவநேயன் எழுதுவது:-

வேண்டுகோள்

அன்பார்ந்த ஐய,

வணக்கம்.

தாங்கள் இதுவரை அரைநூற்றுண்டாகக் குமுகாய (சமுதாய)த் துறையிலும் மதத்துறையிலும் தமிழ்நாட்டிற்குச் செய்துவந்த அரும் பெருந் தொண்டு அனைவரும் அறிந்ததே. ஆயின், மொழித்துறையில் ஒன்றுஞ் செய்யவில்லை. ஒரு நாட்டுமக்கள் முன்னேறும் ஒரே வழி அவர் தாய்மொழியே. ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி தாங்களே ஒன்று நிறுவினீர்கள், ஆங்கிலக் கலைக்கல்லூரி ஒன்றிற்கு ஐந்திலக்கம் உருபா மானியமாக உதவினீர்கள். இந்நாட்டு மொழியாகிய தமிழை வளர்க்க ஒரு கல்லூரியும் நிறுவவில்லை.

ஆதலால், தங்கள் பெயர் என்றும் மறையாமலும் தங்கள் தொண்டின்பயன் சிறிதும் குறையாமலும் இருத்தற்குக் கீழ்க்கண்ட வாறு, பெரியார் தென்மொழிக் கல்லூரி *எனச் சென்னையில் ஒரு கல்வி நிலையம் இயன்றவிரைவில் நிறுவுமாறு தங்களை வேண்டுகின் றேன்.*

திட்டம்

தமிழையும் அதன் வழிப்பட்ட மலையாளம், கன்னடம், தெலுங்கு, குடகு, துளு, கோத்தம், தோடம், கோலாமி, நாய்க்கி, பர்சி, கடபா, கோண்டி, கொண்டா; கூய், குவீ, குருக்கு, மாலத்தோ, பிராகுவீ என்னும் பதினெண் திரவிடமொழிகளையும், தமிழ்வாயிலாகவும் ஆங்கில வாயிலாகவும் கற்பித்தல்.

மதம் கற்பிக்கப்படாது. கடவுள் வாழ்த்துப் பாடப்பெறாது. அதற் கீடாகப் பெரியார் வாழ்த்து *அல்லது புகழே பாடப்படும். கல்லூரி நடப் பிற்குரிய சட்டதிட்டங்களைத் தாங்களே அமைத்துத் தரலாம்.*

www.thamizham.net - Free E book No 7421

ஆசிரியர் குழு

முதல்வர்: பேரா. தி. வை. சொக்கப்பா, எம். ஏ., எல். தி., தமிழ்ப்பேராசிரியர்.

தலைவர்: ஞா. தேவநேயன்.

துணைவர்: தமிழ்மறவர் வை. பொன்னம்பலனார்.

பிறமொழிகட்குத் தகுந்த ஆசிரியர் விளம்பரஞ்செய்து அமர்த்தப் பெறுவர்.

மாணவர்

பள்ளியிறுதி அல்லது அதற்குச் சமமான தேர்வு முதல்வகுப்பில் தேறிய ஐம்பதின்மர் குல மத கட்சியின நாடு வேறுபாடின்றித் தெரிந்தெடுக்கப் பெறுவர்.

வெளியூர் மாணவர்க்கும் வெளிநாட்டு மாணவர்க்கும் உண்ணவும் தங்கவும் விடுதியிருக்கும்.

கல்விக்கட்டணமும் விடுதிக்கட்டணமும் பின்னர்த் தெரிவிக்கப் படும்.

மானியம்

சென்னையில் சூழ்நிலத்தோடு கூடிய மாளிகை யொன்றும் ஐந்திலக்கம் உருபாவும்.

கடவை (Course)

இலக்கணம், இலக்கியம், மொழிநூல், ஏரணம் (Logic), இசை, நாடகம் என்னும் ஆறும் ஐந்தாண்டு கற்பிக்கப்பெறும். பின் மூன்றும் தமிழிலேயே நடைபெறும்.

பாடத்திட்டம் பின்னர் வகுக்கப்பெறும்.

பயன்

தமிழ் வடமொழியினின்று மீட்கப்பெற்றுத் தூயநடையிற் கற்பிக்கவும் உலக முழுதும் பரப்பவும் பெறும்.

தமிழரும் திரவிடரும் ஆரிய அடிமைத்தனம் அடியோடு நீக்கி முன்னேற்றப் பாதையில் அடியிட்டு விரைந்து நடப்பர்.

www.thamizham.net - Free E book No 7421

ஐயாட்டைக் கடவை முடித்துப் பட்டம் பெற்ற மாணவர், உள் நாட்டிலும் வெளிநாட்டிலும் மொழியாசிரியரும் மொழிநூலாசிரியரும் இசையாசிரியரும் நாடகவாசிரியருமாகப் பணியாற்றும் வாய்ப்புப் பெறுவர்.

அன்பன்



குறிப்பு: திருவள்ளுவராண்டு 2000 ஆடவை கரு-ஆம் பக்கல் (25-6-'69 அன்று இதன் சுருக்கம், வேலூர் நகரசவைத் தலைவர் திரு. மா. பா. சாரதி அவர்களின் தம்பிமகன் திரு. அன்பழகன் திருமண விழாவிற்குத் தலைமை தாங்கிய பெரியார் அவர்களிடம் என்னால் நேரிற் கொடுக்கப்பெற்றது. இன்னும் மறுமொழியில்லை. ஞா. தே.

பண்டைத் தமிழ் இலக்கியங்களில் பொதுவுடைமைக் கருத்துகள்.

இக்காலத்தில் பொதுவுடைமைக் கருத்துகள் அரசியற் பேச்சாளர்களால் கவர்ச்சியாகவும் மிகுதியாகவும் மக்களிடையே பேசப்பட்டு வருகின்றன. இதற்குக் காரணியம் நாட்டில் வறுமையும், பற்றுக்குறையும் மலிந்திருப்பதே யாம். இதை வைத்து, அரசியற் பேச்சாளர்கள் மொழிவளர்ச்சியை வீழ்த்த முனைந்து வருவதாகத் தெரிகிறது. ஆனால், பொதுவுடைமை என்பது கடந்த சில நூற்றாண்டுகளாக உருசியாவில் தோற்றி வளர்ந்துவரும் கொள்கையன்று; பழந்தமிழ் நாட்டில் வேரூன்றிப் பரவிய கருத்தேயாகும் என்பதை இதற்கு முன்பு தென்மொழியிற் பலமுறை குறிப்பிட்டிருக்கிறோம்.

கழக இலக்கியங்களிலும், பிற்காலப் புலவர் பாடல்களிலும் பொதுவுடைமைக் கருத்துகள் ஆங்காங்கு மிளிர்வதைத் தமிழ் இலக்கியங்களை ஆழ்ந்து கற்றோர் நன்கறிவர். எடுத்துக்காட்டாக, "செல்வத்துப் பயனே ஈதல். துய்ப்பேம் எனினே தப்புந பலவே" எனப் புறநானூற்றிலும், "ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம், பேரறிவாளன் திரு" எனத் திருக்குறளிலும் வருவதைக் குறிப்பிடலாம்.

இத்தகைய கருத்துகளைத் தொகுத்து மேற்கண்ட தலைப்பில் பேராசிரியர்களும் புலவர் பெருமக்களும் கட்டுரைகள் எழுதி விடுப்பராயின், அவை "தென்மொழி"யில் தொடர்ந்து வெளியிடப்பெறும்.

அமைச்சர்.

www.thamizham.net - Free E book No 7421

சாட்டை கொடுத்தறிக்கை விடத் தாளொன்று அற்றதுவே!

—இ. மறைமலை, க. மு., அறி. இ.

தமிழ்நாட்டில் புற்றீசல்களைப் போல நாளொரு தாளிகையும் பொழுதோர் இதழிகையும் புறப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இவற்றின் நோக்கம் ....? எப்படியும் பொருளீட்டல் ...! எப்படியும்....என்றால்...? அரை அம்மணமாக ஆரணங்குகளைப் படம் பிடித்து அட்டையிலே மூவண்ணத்துடன் அச்சிட்டு விற்றல்;. எந்தெந்த நாட்டிலே நடிகையர்கள் எப்படி எப்படி உடுத்து எப்படி எப்படித் தளுக்கி மினுக்குகிறார்கள் என்று அடிப்படைச் சான்றுகளுடன் (!) ஆய்வுரை அளித்தல்; நடிகர்கள் தும்முவதையும் இருமுவதையும் எட்டுப் பத்தியிலே தலைப்பிட்டு வெளியிடல்...இன்னபிற. கவர்ச்சிப்படங்களையும் கலப்புத் தமிழையும் காசாக்கும் இந்தக் கழிசடைகளையும் விட மேலான கழிசடைகள் இப்பொழுது பல்கிப்பெருகி வருகின்றன! அவை யாவை? "தமிழ் ஆராய்ச்சி" என்று கூறிக்கொண்டு தமிழையே அடகுவைக்கும் ஆராய்ச்சித் தாளிகைகளே அவை. மாந்தனின் விலங்குணர்வைப் பயன்படுத்திக் காசுபறிக்கும் தரக்குறைவுகளைக் கூடப் பொருட்படுத்தாது வாளா விடலாம். இரவுவிடுதிகளும், கள்ளுக்கடைகளும் போலத்தாம் அவை! மனவலிமை இல்லாதவர்களைக் கீழுணர்வுக்கு இழுக்கும் பணி அவற்றுடையது. ஆனால் இந்த ஆராய்ச்சித் (!) தாளிகைகள் இருக்கின்றனவே இவை பசுத்தோல் போர்த்த புலிகள். ஆரிய நாகரிகம் சமய அடிப்படையில் எப்படித் தமிழகத்தில் ஊடுருவித் தமிழகத்தின் வீழ்ச்சிக்குக் காரணமாக இருந்ததோ, அதே போல ஆராய்ச்சி என்ற பெயரில் தமிழுக்குப் புதைகுழி தோண்டிக் கொண்டிருக்கின்றன இந்தத் தாளிகைகள்!

"தீபம்" என்றொரு தாளிகை! புகழ் பெற்ற (?) எழுத்தாளர் ஒருவரை ஆசிரியராகக் கொண்டு திங்கள்தோறும் வெளிவருகிறது. "இலக்கியச் சந்தை" என்ற பெயரில் இலக்கியச்சந்தையில் அடிபட்டுப் போன அரைவெட்டுகளை, குறைகுடங்களைக் கண்டு கேள்விகளை எழுப்பி விடைகளை வெளியிட்டுக் கொண்டிருக்கின்றது. எல்லா நேர்முக உரையாடல்களிலும் பொதுவாகக் கேட்கப்படும் கேள்வி தனித்தமிழைப் பற்றியதே! எப்படியாவது இந்தநாட்டில் தனித்தமி

www.thamizham.net - Free E book No 7421

மைத் தரைமட்டமாக்கிவிட வேண்டும் என்ற முனைப்பில் கேள்வி களும் அதற்குக் கட்டியம் கூறும் வகையில் விடைகளும் அமையும். இந்தத் "தீபம்" தனக்கென ஓர் எழுத்தாளர் குழுவையே உருவாக் கித் தமிழைச் சிதைக்கும் நற்பணிக்குக் கூட்டத்தைப் பெருக்கிக் கொண்டிருக்கிறது. இந்தத் "தீபம்" திங்கள் தொறும் கக்கும் நச்சுக் கருத்துகளுக்கு மறுப்புரை கூறத் தக்க தாளிகை இல்லை, நம் தென் மொழியைத்தவிர.

இப்பொழுது புதிதாக "ஆராய்ச்சி" என்றோர் அருமையான (!) இதழ் வெளிவருகிறது. இது காலாண்டு இதழ். இதன் இரண்டாம் இதழைப் (அக்டோபர் 1969) பார்க்க நேரிட்டது. தமிழைப் பற்றி என்னவேண்டுமானாலும் கூறலாம்,எப்படிவேண்டுமானாலும் கூறலாம் என்ற மனப்போக்கினை உடைய ஆராய்ச்சியாளர்கள் ஒன்று கூடி மனம் போன போக்கில் தங்கள் தூவலைத் திசைதிருப்பி விட்டிருக்கி றார்கள். இந்த "ஆராய்ச்சி" இதழின் பெருமையைக் கூற அதன் எழுத்தாளர்கள் யாரென்று அறிவித்தலே போதும்.

இந்திய வரலாற்றை உருவாக்கும் 'சக்தி'கள்.

—எசு. ஏ. டாங்கே

இந்திய வரலாறும் மார்க்சியக் கண்ணோட்டமும்.

—அமலேந்து குகா.

ஆக எசு. ஏ. டாங்கேயும் அமலேந்து குகாவும்தான் இப்போது தமிழ் ஆராய்ச்சிக்குத் தகுந்த வழிகாட்டிகளாக அமைந்துள்ளார்கள். நாடறிந்த பொதுவுடைமையாளரான வானமாமலை இப்போது பொது வுடைமையைப் புகுத்துவதற்கு "ஆராய்ச்சிப்" போர்வையைத் தேடி யுள்ளார். துவராடைப் போர்வையில் ஆரியர்கள் நுழையவில்லையா? அதேபோல!

இந்தப் பொதுவுடைமைத் தோழர்கட்கு ஒரு சொல்; வள்ளுவர் கூறும் பொதுவுடைமையையும் பாவேந்தர் கனவுகண்ட நிகரமை மன்பதையையும் இவர்கள் முதலில் உணர்ந்து கொள்ளட்டும். அதனை உணர்ந்து கொள்ளத் திறமில்லாமல் கார்க்கியையும் இலியனோவா வையும் இவர்கள் தமிழ் மகனுக்கு அறிமுகப் படுத்துவது பகடிக் கூத்தாக அமையும். இவர்களாலும் போற்றப்படும் பாரதியார் கூறு வதைப்போல,

வேறுவேறு பாசைகள் கற்பாய் நீ!
வீட்டு வார்த்தை கற்கிலாய் போ! போ! போ!

www.thamizham.net - Free E book No 7421

என்றுதான் நாமும் இவர்களை விரட்டியடிக்க வேண்டியுள்ளது.

இந்தப் பொதுவுடைமைத் தோழர்கள் 'தாமரை' என்று ஏற்கனவே ஓர் இலக்கியத் திங்களிதழை நடத்தி வருகின்றார்கள். மறுமலர்ச்சி என்றால் அவர்கள் அகரமுதலியில் பொதுவுடைமை என்றுதான் பொருள். பாவேந்தரின் பெருமையையோ நாவலர் சோமசுந்தர பாரதியாரின் இலக்கியத் திறனாய்வையோ சற்றுக்கூடப் பொருட்படுத்தாமல் வ. ரா. வல்லிக்கண்ணன், விசயபாசுகரன் தொ. மு. சி. இரகுநாதன் போன்ற இலக்கியக் கோமாளிகளுக்கு முதன்மை கொடுப்பதே "தாமரை"யின் முதற்பணி.

இந்தத் "தாமரை" தமிழுக்குப் புதைகுழி தோண்டுவது போதாதென்று இப்போது "ஆராய்ச்சி"யும் வந்துள்ளது, அதே பொதுவுடைமை மன்றத்திலிருந்து.

பொதுவுடைமையரின் தமிழன்பை நாம் போற்றுவோம்; அவர்கள் முறையான தமிழ்த்தொண்டு செய்ய முற்பட்டால் தலைவணங்கிட அணியமாக உள்ளோம்.

ஆனால் தமிழைப் பற்றிய தவறான கருத்துகளை, உண்மையான தமிழ்மகன் கற்பனை செய்துகூடப் பார்க்க இயலா எண்ணங்களை 'ஆராய்ச்சி' என்ற பெயரிலே அச்சிட்டால் நம்மால் பொறுத்துக் கொண்டு இருக்க இயலாது.

"தமிழைப் பழித்தவனைத் தாய் தடுத்தாலும் விடேன்" என்று கிளர்ந்த அடலேறு பாவேந்தர் பிறந்தநாடு இது! "ஆராய்ச்சி"யின் நச்சுத் தீயைப் பேராசிரியர்கள் பொறுத்துக்கொண்டு வாளாவிருந்தாலும், உணர்வுள்ள நம்போன்ற தமிழ் இளைஞர்கள் பொறுத்துக் கொண்டிருக்க இயலவே இயலாது!

பண்டாரகர் பட்டம்பெற்ற பெருமகனார் ஒருவர்-வித்துவான் பட்டம் வேறு-அந்தப் பெரும் பேராசிரியர் ஒரு பல்கலைக் கழகத்தில் ஒருதுறைக்குப் பேராசிரியராகப் பணியாற்றிக் கொண்டு இருக்கின்றார். அந்தப் பேரறிஞர் பெருமுனைப்புக் கொண்டு ஆய்ந்து கண்டுள்ளார் ஓர் அரும்பெரும் உண்மையை!

"பண்டைத் தமிழகத்து மகளிர்" என்ற தலைப்பில் கட்டுரை! கட்டுரை எழுதியுள்ள அந்தப் பேராசிரியர் கண்டுள்ள உண்மைகள்:

www.thamizham.net - Free E book No 7421

1. கி· பி. 600-க்கு முற்பட்ட காலமே கழகக்காலம்.

2. கழகக்கால மகளிர் நிலை ஆடவர் நிலையினும் இழிந்திருந்தது

3. பாரதிகண்ட "புதுமைப்பெண்" என்ற கனவைக் கழகக்கால மகளிர் கனவிலும் எண்ணியறியார்.

4. 'ஆண்,' என்று கூறியதனாலேயே (ஆளும் தன்மையை உடையவன்) பெண் அடிமை என்பது நன்கு புலப்படுகின்றது.

5. சிலப்பதிகாரம் நமக்கு அறிவுறுத்தும் உண்மை, பெண்கள் தங்கள் நகைகளைக் கணவன்மார் கட்டாயப் படுத்தும்பொழுது அளித்துத் தீரவேண்டிய அடிமை நிலையில் இருந்தார்கள் என்பதே!

6. பண்டைத் தமிழகத்தில் 'பல்மனைமணம்' போற்றப்பெற்றது எடுத்துக்காட்டு (கழகக்காலத்திற்கு மிகவும் பிற்பட்ட காலத்தில் தோன்றிய) சீவகசிந்தாமணி!

இன்னும் என்னென்னவோ! தம் ம(ா)னம் விட்டுப் பல புதிய கருத்துகளை அப் பேராசிரியர் கூறுகின்றார்.

இந்தப் பன்னாடைகளின் புலம்பலுக்குச் சரியான மறுப்புரை அளிக்க இன்று தகுதியானதொரு தாளிகை தமிழகத்தில் உளதா?

"கெஞ்சுவதில்லை பிறர்பால்!" என்று போர்க்கொடி உயர்த்திய தென்மொழியை எத்தனைத் தமிழர்கள் பயன்படுத்திக் கொண்டனர்? தமிழைப் பயிற்றித் தமிழாலே பிழைக்கும் ஆசிரியப் பெருமக்களாவது தென்மொழிக்குத் துணை நல்கினரா!

நச்சுப் பாம்புகள் மேலும் மேலும் பெருகிக் கொண்டே போகின்றன! நேற்று 'தீபம்'! இன்று 'ஆராய்ச்சி! நாளை வேறொன்று! ஆனால் நற்றமிழ்நலம் காக்கும் கொள்கைக் கேடயங்கள் எத்தனை புறப்பட்டுள! தமிழுக்குச் சாவுமணி அடிப்போரை எதிர்த்துப் போர் முழக்கம் செய்யும் முரசங்கள் எத்தனை! கிளம்பிய தென்மொழிக்கு உறுதுணை எவ்வளவு? தமிழகமே! தமிழனனையே! இறைமைப் பேரொளிதான் உன்னைக் காக்கவேண்டும்; தமிழர்கள் செயலொடுங்கிய பேடர்களாகத் துயின்று கொண்டிருக்கும்வரை! O

www.thamizham.net - Free E book No 7421

யார் பகைவர்......?

-அரிமதி-தென்னகன்-

எரிதீ நெஞ்சம்; இமையாக் கண்கள்
குருதி தோய்ந்த கொடுவேல் முனைகள்;
செறுபகை யழிக்கும் நெடுநினைவு; அடிமை
முறிபடத் தாக்க முன்செலத் துடிக்கும்
இருதோள்; காட்டிடை எழுந்த புயலென
வீழ்த்தப் பதைத்து விரையும் கால்கள்;
காழ்த்த மறத்தனக் காளை ஒருவனின்
ஓட்டம் தடுத்தேன்!

"ஓ!ஓ! மறவனே!"

வேட்டெஃகத் தோடு விரைவதும் யாங்கண்?"
என்றேன்; அவனோ, எள்ளி நகைத்தே,
"அன்புத் தமிழ்ப்பகை அழித்திடச் செல்வேன்;
இன்பத் தமிழ்நிலம் எவர்க்கோ அடிமையா?
பொன்றுப் புன்மையைப் பொடிசெய விரைவேன்;
ஒன்றும் அறியாப் பேதையே" உணர்க!
என்றனன்; சிரித்தேன்; ஏனெனக் கொதித்தான்.

"நமக்குப் பகை,நாற் றிசையுண் டறிவேன்;
கமுக்கமாய் அருகே களிப்புட னிருந்து
பள்ளம் பறிப்போர் பகைவர் அலரே?
குள்ள மனத்தார், கொள்ளியை வைப்போர்
நல்லவர் போல நம்பால் உளரே!

தனித்தமிழ்க் கொள்கையர் தாள்களை வெட்டுவோர்
தனித்தமிழ்ப் பற்றுளோம் என்னும் தருக்கராய்
இருப்பதை நீயும் இன்னும் அறிகிலாய்?
ஒருபாய் படுத்தனர்; ஒருதட் டுண்டனர்;
உறவே! அன்பின் உருவே! என்றனர்
திருவே! தெரிவே! தீந்தமிழ்ப் பொழிவே!
என்றெலாம் இனிக்க எதிரில் போற்றினோர்.
தென்மொழிச் சிதைப்பே தேன்தரு சுவையென
இன்றிருக் கின்றனர்; இன்னும் உணர்கிலாய்?
தீட்டிய மரத்தில் கூர்பார்த் தனர்போல்

www.thamizham.net - Free E book No 7421

பாட்டால் கூடப் பழிப்போ ராயினர்.
'எல்லாந் தமிழ்க்கே' என்போர் அழிக்கும்
புல்லரும் தமிழெனும் போர்வையுள் கிடப்பர்.
துய்தமிழ் நெஞ்சைத் துடிக்கவும் வைப்போர்
மெய்யுயிர் வாழ்வே மேன்மைத் தமிழ்க்கென
ஏங்கிடும் உளத்தில் இழிசொல் பாய்ச்சுவோர்,
'யாங்களே தமிழினைக் காத்திடும் அரிமா'
என்றே பசப்பி ஏய்த்துலா வருவார்!!

ஆகாப் பகைவர் அறுத்த கழுத்தினை
நோகா தறுக்கும் நோன்பினர் கூடத்
தண்டமிழ் காக்கும் தகையராய்த் தோன்றுவர்.
பூண்டகோ லத்திறல் பொய்மறைத் திருப்பர்.

புலியினை எதிர்த்துப் போரிடும் மறவனை
எலிப்பயல் என்பார்; எம்மரும் ஆற்றல்
உளரெவர் ஈங்கென உரைத்தேய்ப் பாரே!
களரெனும் மனத்தர்; வாய்மலர் காட்டுவர்!!
புறப்பகை தேடிப் புறப்பட் டோயே!
உறுப்பென அருகே உட்பகை பாராய்!!
உட்பகை, அறிவாய்; உன்கடன் தெரியும்.
நாட்படல் தீது; நம்பியே! அறிக!!
நெற்பயிர் அழிக்கும் நெடும்பகை வேறிலை;
புற்பயி ரன்றோ? புரிந்துகொண் டனையோ?';
என்றேன்; கேட்டே இறும்பூ தெய்தினன்.
'இன்றுமா இந்நிலை?' என்றுளம் நைந்தனன்.
தன்னையும் மறந்து தலைகவிழ்ந் தானே!!

தென்மொழி-கடலூர்-1.

[உலகத் தமிழ்க் கழகச் செய்திகள் முழுமையாகத் தொடர்ந்து வரும் ஒரே இதழ்]

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.

ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்:	9 உருபா.	10-50 உருபா.	13 உருபா.
தனி இதழ் :	75 காசு.	90 காசு.	1 உருபா.

www.thamizham.net - Free E book No 7421

பகற் கனவு

புலவர். திருமேனி நாகராசன், காரைக்கால்.

முன்னுரை: ஒருவன் விழிப்பு நிலையில் காண்பது பகற்கனவாகும். வறியன் செல்வனாகவும், மெலியன் வலியனாகவும், பேதை மேதையாகவும் தன்னைத்தானே விழிப்பு நிலையில் மேம்படுத்திக் கண்டு கொள்வர். இவை பகற்கனவின் கூறுபாடுகள். இப் பகற்கனவு பற்றி உளவியலார் மாந்தரின் உளப்பாகுபாட்டையும், அகக் காட்சிகளையும் கொண்டு ஆய்வு நடத்தியுள்ளனர். அவருள் விதந்தோதத்தக்கவர் மேரி, சைமண்டுசு.

பகற்கனவு வேறுபாடு: உலக மாந்தருள் நூற்றுக்கு அறுபத்தொன்பதின்பர் அடிக்கடி பகற்கனவு காண்கின்றனர். எஞ்சியவர் எப்பொழுதோ அதனைக் காண்கின்றனரென்க. இஃது உளவியலார் கண்ட முடிபு. உலகில் சிலர் பொருத்தமுள்ள வகையில் பகற்கனவு காண்கின்றனர். அது வேண்டுவதே. என்னை? அவர் பகற்கனவு என்றாவது செயலுருவம் பெற்றுச் சிறந்திடலாம். பண்டு நிலவினைப் பிடிக்க மாந்தன் பகற்கனவு கண்டான். இன்று அவன் கனவு செயலுருவம் பெற்று விட்டமை உலகறிந்த உண்மையாயிற்றென்க. பிறவும் அன்னவே! இதனையே கற்பனை என்பார் அறிவின் வல்லார். வேறு சிலர் பொருத்தமில் வகையில் பகற்கனவு காண்பரென்க. முடவன் கொம்புத் தேனிற்கு ஆசையுறல், முந்நீருலகிற்குத் தானே தலைவனாக வேண்டுமென்றல் பிறவுமாம்; இவ்வகைப் போக்கால் மனக்கோளாறே உண்டாகும்.

சங் (Jung) கொள்கை: சங் உலக மாந்தரை இருவகையாகப் பகுத்தார். ஒருசாரார் புறமுகத்தினர்; பிறிதொரு சாரார் அகமுகத்தினர். புறமுகத்தினர் குமுகாயத்தில் நன்கு பழகுவர். அவரது இன்ப துன்ப நுகர்வுகளை யாவரும் அறியலாம். இக்காரணம் பற்றிப் புறமுகத்தினர்க்குப் பகற்கனவு குறைவே. அகமுகத்தினர் குமுகாயத்தில் ஊடாடிப் பழகார். அவர் தனி இடத்தே பயில்வர். தமது இன்ப துன்ப நுகர்வுகளை வெளிக்காட்டார். இவ்வகை இயல்பினர்க்குப் பகற்கனவு மிகுதியாம். இவை சங் கொண்ட முடிபென்க.

பகற்கனவும் அகவை நிலையும்: பொதுவாக ஆராயுமிடத்து முதியரினும் இளைஞரிடமே பகற்கனவு காண்டல் மிகுதியாகும். மூன்று அகவைக்குப் பின்னரே பகற்கனவு தோன்றும். அதற்கு முன்

www.thamizham.net - Free E book No 7421

னர் அது குழந்தைகட்கு வருவதில்லையாம். (அ) ௩-௧௭ அகவைவரை நூற்றுக்கு அறுபது விழுக்காடு பகற்கனவு இருக்கும்: (ஆ) ௧௭-௨௨ அகவைவரை முன்னிலும் அதிக விழுக்காட்டில் பகற்கனவு இருக்குமாம். (இ) ௨௨ அகவைக்குமேல் பகற்கனவு மாந்தர்க்குச் சுவை அளிப்பது பெரும்பான்மையும் இல்லையாதலின் அது குறைந்தே காணப்படுமாம். (க) ௩-௧௦ அகவைவரை சிறுவர்கட்குத் தங்களைப் பொருளாக் கொண்ட பகற்கனவே தோன்றும். (உ) ௧௦-௧௭ அகவைவரை உள்ளோர்க்குப்பெற்றோர். குடும்பம் தொடர்பாகப் பகற்கனவு உண்டாம். (௩) ௧௭-௨௦ அகவைவரை இளைஞர்கட்குப் பாலுணர்ச்சி பற்றிப் பகற்கனவு உருவாகும். (௪) ௨௦ அகவைக்குமேல் வாழ்க்கையில் ஒருவனுக்குத் தான் மேற்கொள்ள விருக்கும் தொழிலைப் பற்றியே பகற்கனவு அமையும்.

பகற்கனவும் பருவமும்: மாந்தர்க்குச் சிறப்பாக இளமைப் பருவத்தில்தான் மிகுதியான பகற்கனவு உண்டென்பது ஆய்வின் முடிபு. இளைஞர் பேராண்மை காட்டித் தாம் குழுகாயத்தில புகழுறுவதாகப் பகற்கனவு காண்பர். ஆற்றிடைப் போகும் அரிவை ஒருத்தியை அருந்திறல் காட்டித்தாம் மீட்டல் போலவும், தாமே உலக அழகனுகத் தெரிந்தெடுக்கப்பட்டு ஒண்டொடியர் உவந்தேத்த உயர்புகழ் பெறுவது போலவும் பகற்கனவு காண்பர் என்க. இனிப் பருவமங்கையரோவெனில் தம்மையே உலக ஆடவரெல்லாம் வட்டமிட்டுச் சுற்றத் தாம் பெருமிதங்கொண்டு ஏறுநடை பயில்வது போலவும், தாமே கலைத்துறையின் ஒப்பில் தலைவியர் எனவும் பகற்கனவு கண்டு இன்புறுவரென்க. பிறவும் அன்ன. விரிப்பின் பெருகும்.

பகற்கனவு உண்டாகும் காலம்: ஒருவற்கு வேலை இல்லாத காலத்தில் பகற்கனவு உண்டாகும். தனிமையும் பகற்கனவிற்கு ஓர் ஒப்பற்ற காலமாகும். மாலைப் பொழுதும், வெண்ணிலவும், அருவி ஓதையும், மலையுச்சியும், மெல்லிசையும் இவைபோன்ற பிறவும் பகற்கனவை உண்டாக்கும் சூழல்கள் என்க.

பகற்கனவு தோன்றுமிடம்: சிலர்க்குப் பகற்கனவு இன்பத்தின் அடிப்படையில் தோன்றும்; வேறுசிலர்க்கு அது துன்பத்தின் அடிப்படையில் உண்டாகும். கல்லூரி அளவில் விளையாட்டில் முதன்மை பெறும் ஒருவன் பல்கலைக்கழக அளவிலும் தானே முதன்மை பெற்று விட்டதாகப் பகற்கனவு காண்டல் உண்டு. கையில் இருந்த ஒரு சிறு தொகை பறிபட்டுப்போக ஏனைய தனது எல்லா

www.thamizham.net - Free E book No 7421

உடைமையும் இழக்கப்போவதாகச் சிலர் பகற்கனவு காணுதலும் உண்டென்க. இவை தாம் முறையே இன்ப துன்ப அடிப்படையில் தோன்றியமை காண்க.

பகற்கனவு யாருக்கு மிகுதி?: யாருக்குப் பகற்கனவு மிகுதி என்று புகழ்பெற்ற உளவியல் அறிஞர் ஈட்டன்மேயோ (Eton Mayo) ஆய்வு செய்தார். அவர் ஆடவரினும் மகளிரே மிகுதியாகப் பகற்கனவு காண்பதாகக் கண்டார். ஆடவர் உடல் வருந்த உழைப்பதால் அவர்கட்குப் பகற்கனவு மிகுதியாகக்காண வாய்ப்பில்லை; அறிவுழைப்பிலும் ஆடவர் நிலை அன்னதே. ஆயினும் பொறிகளில் வேலைசெய்யும் ஆடவரின் அலுவல் மறிவினைபோல் இருக்குமாயின், அவர்கட்குப் பகற்கனவு காண வாய்ப்பு உண்டென்பதை ஈண்டு நினைவில் வைக்க. மகளிர் பெரும்பான்மையும் பகற்கனவு காண்பதற்குக் கரணியம் அவர்தம் வேலைமுறைகளே என்க. மகளிர் மனம்பதியாத வழக்கப் பட்ட-அலுவலின் காரணமாகவே மிகுதியும் பகற்கனவு காண்டற்கு ஆட்படுகின்றனர்.

பகற்கனவும் கனவும் (ஒப்பீடு): (அ) கனவு நினைவிலி மனத்திலிருந்து தோன்றுகிறது; பகற்கனவு நினைவு மனத்திலிருந்து உண்டாகிறது; (ஆ) கனவிற்குப் பழைய நினைவே தூண்டலாக அமையும்; பகற்கனவோ நேரடித் தூண்டலால் உருவாகிறது. (இ) கனவில் எண்ணங்கள் மாறுபடும்; பகற்கனவில் எண்ணங்கள் ஆற்றொழுக்காகத் தொடர்ந்து வரும். இனி இவ்விரண்டிற்கும் வேறுபாடுகள் பல உண்டாயினும் ஒற்றுமை ஒன்றே ஒன்று உண்டென்க. அஃதியாதெனில், கனவும் பகற்கனவும் வாழ்வில் நிறைவேறா ஆசை இயல்பூக்கங்கள் இவற்றின் அடிப்படையில் தோன்றும் என்பதாம்.

முடிவுரை: முடிவாக, ஒருவன் சிற்றின்பம் கருதிப் பன்னாள் பகற்கனவு தொடர்ந்து கண்டின்புறின், இறுதியில் அவன் பகற்கனவு நோய்க்கு ஆளாவான் என்க. பகற்கனவு நோயென்பது பகற்கனவு காணும் நிலையிலிருந்து நினைவுலகிற்கு மீளாத் துயரநிலையாகும். அந்நோய்க்கு ஆட்பட்டான் உலக நடப்பு நிலைக்கு மீளான். குமுகாயச் சூழல்கள் அவனை ஒன்றும் செய்யா. அவன் உண்ணுதல் செய்யான்; உறங்குதலும் ஒழிவான். முடிவில் இறந்துபடுவான். ஆதலின், பகற்கனவு காண்டலைக் கைவிடுக.

O

www.thamizham.net - Free E book No 7421

தொல்காப்பிய எழுத்ததிகார இயல்களின் இடப்பொருத்தமும் பெயர்ப் பொருத்தமும்.

பேராசிரியர். க. ப. அறவாணன், க. மு.

III. பிறப்பியல்: 'எழுத்துகளின் பிறப்புணர்த்தினமையின் பிறப்பியல் என்னும் பெயர்த்து ......சார்பில் தோற்றத்து எழுத்தும் தனிமெய்யும் மொழிமரபிடை உணர்த்திப் பிறப்பு உணர்த்த வேண்டுதலின் மொழிமரபின் பின்னதாயிற்று'-என இளம்பூரணர் பெயர்ப் பொருத்தத்தையும் இடப்பொருத்தத்தையும் தெளிவு படுத்துகிறார். நச்சினார்க்கினியரும் இக்கருத்தினரே.

மொழிமரபு தனித்த இயல். பிறப்பியலோ எழுத்துகள் பிறக்கு மாற்றைக் கூறுகிறது. மொழி பிறக்குமாற்றை அது கூறவில்லை. அவ்வாறெனில் மொழிமரபை அடுத்து வைத்ததன் கருத்து என்ன? எழுத்தை உணர்த்தி-அது பிறக்குமாற்றை அடுத்த இயலில் உணர்த்தி, அது மொழியாற்றை மூன்றாவதாக உணர்த்தி இருப்பின் வரப்போகும் இழப்பு என்ன? பெயரைச் சொல்லி-அதன் வரலாற்றைச் சொல்லி-அடுத்து அதன் வளர்ச்சியைச் சொல்லலே முறை எனில், ஈண்டும் முதற்கண் எழுத்து, பிறப்பு, மொழி என உணர்த்தி இருக்க வேண்டுதலே முறையாம். அன்றியும் பிறப்பியலில் ஈற்றில் உள்ள இரண்டு நூற்பாக்களும் தவிர்க்க முடியாதனவா என்பது ஆராயத்தக்கது.

தமிழ் ஒலிகளின் தோற்றத்தைத் தெளிவு படுத்தும் இவ்வியல் தான்-ஏறக்குறைய தமிழ் ஒலிகள் இன்றுவரை பெருமாற்றம் அடையாமல் கட்டிக்காத்து வந்திருக்கிறது. தொல்காப்பியர் பேசிய, எழுதிய தமிழ் மொழியைத்தான் நாம் பேசுகிறோம், எழுதுகிறோம் என்று தலைநிமிர்ந்து கையடித்துச் சொல்ல இந்த ஓரியலே போதும்!

IV. புணரியல்: இவ்வியல்தான்-மொழிநூலறிஞன் ஆற்றலை, அறிவினை ஆயும் தொடக்க இயலாகும். அவனது பரந்துபட்ட இலக்கிய மொழிப் புலமை, இலக்கணமொழிப் புலமை, வழக்குமொழிப் புலமை ஆகியன உரசப்படும் உரைகல்-இவ்வியல்தான். இதனை அடுத்துவரும் ஆறு இயல்களும் புணர்ச்சியைப் பேசுவனவே. குறுகிய வேற்றுமைகளும் பெருகிய ஒற்றுமைகளும் உடைய -இவ்வாறியல்களும் புணர்ச்சி என்ற ஒரு குடும்பக் குழந்தைகள்.

www.thamizham.net - Free E book No 7421

'புணர்தற்குரிய கருவியின் இயல்பு கூறினமையின் புணரியல் எனப்பட்டது. மேல் மொழிமரபிற் கூறிய மொழிகள் புணருமாறு உணர்த்தினமையின் மொழிமரபினோடு இயைபுடைத்தாயிற்று' என்பர் இளம்பூரணர்.

'மொழிமரபிற் கூறிய மொழிகளைப் பொதுவகையாற் புணர்க்கும் முறைமை உணர்த்தினமையின் புணரியலாயிற்று. ஈண்டு முறைமை என்றது மேற் செய்கை ஒத்துக்களுட்(தொகைமரபு, உயிர் மயங்கியல் புள்ளி மயங்கியல், குற்றியலுகரப் புணரியல்) புணர்தற்கு உரியவாகக் கூறிய கருவிகளை' என நச்சினார்க்கினியர் எழுதுகிறார்.

'பொதுவகையால்' என்று அவர் குறித்த தொடரில் நிரம்பப் பொருளுண்டு. இவ்வியல் பொதுப்புணர்ச்சி என்றும், அடுத்து வருவன சிறப்புப்புணர்ச்சியின என்றும் வேறுபடுத்தவே அவர் இவ்வாறு கூறினார் போலும்.

இரு உரையாசிரியர்களும் கூறினவற்றில் வியப்பு என்னவென்றால் புணரியலுக்கும் மொழிமரபுக்கும் இயைபு கூறினரே யன்றி இதற்கு முன்னுள்ள பிறப்பியலுக்கும், அடுத்துவரும் புணரியலுக்கும் இயைபு கூறாமல் தப்பித்துக் கொண்டதுதான். இதனாலும் பிறப்பியல் நூன்மரபை அடுத்தும் மொழிமரபுக்கு முன்னும் வைக்கப்பட்டிருக்க வேண்டும் என முன்னே தெரிவிக்கப்பட்ட கருத்து உறுதி அடைகிறது.

புணரியலில் "மெய்யீறெல்லாம் புள்ளியொடு நிலையல்" [105] என மெய்யின் வடிவையும், "குற்றியலுகரமும் அற்றென மொழிப" [106] எனக் குற்றியலுகர வடிவையும், உயிர்மெய்யின் தன்மையையும் [107] ஏன் இங்குக் கூறினார் என்பது தெளிவாகவில்லை. இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் இம்மூன்று நூற்பாக்களும் 'மொழியிலக்கணங் கூறலின் மொழிமரபின் ஒழிபாயிற்று' எனக் குறித்தனர். மொழிமரபின் ஒழிபு இடையில் பிறப்பியலையும் தாண்டி, புணரியலுக்கு வந்ததன் காரணியம் விளங்கவில்லை. அன்றியும் எழுத்துத் தன்மை பேசும் இவை மொழிமரபிற் குரியனவா? நூன்மரபிற் குரியனவா? என்பதும் ஆராய வேண்டுவதாம் எழுத்துச் சாரியை [135-138] பற்றிப் புணரியலில் கூறுவானேன் என்பதும்—விளங்காத செய்தி. நன்னூலார் இவற்றைப்புணரியலில் கூறாமல் எழுத்தியலில் [126] கூறியமை நினைத்துப்பார்க்க வேண்டிய ஒன்று.

www.thamizham.net - Free E book No 7421

புணர்ச்சிக்குரிய மொழிநிலைகள் ஆராயப்பட்டு, புணர்மொழிகள் நான்கு என வகை செய்யப்பட்டு, புணர்நிலை நான்கு என்று கூறி, வேற்றுமை அல்வழி என்ற இருவகைப் புணர்ச்சியையும் குறித்து, இவ்வியல் மேல்வரும் இயல்கட்கு முன்னேடியாக இருந்ததோடு அமைந்திருக்கலாம். அவ்வாறு அமையாமல், வேற்றுமை, சாரியைப் புணர்ச்சிகள் ஈண்டே கூறப்படுகின்றன. வேற்றுமை, சாரியை, புணர்நிலைகளைப் பற்றி முழுக்க முழுக்க உருபியலில் அவர் பேசுவதைப் பார்க்கிறோம். அவ்வண்ணமாயின் புணரியலும், உருபியலும் வெவ்வேறு இயல்களாக வகுக்கப்பட வேண்டுமா என்பது கேட்கப் பட வேண்டிய அடிப்படை வினா.

V. தொகைமரபு: இந்த இயல் இதுவரை கூறினவற்றைத் தொகுக்கிறதா? இனி வரப்போவனவற்றைத் தொகுக்கிறதா? புணரியல் என்ற பெயரை அடுத்து ஏதோ அதனோடு தொடர்பில்லாத பெயர்போலத் தொகைமரபு எனப் பெயரிடுவானேன்? என்ற வினாக்கள் எழுகின்றன.

'உயிரீறும் புள்ளியீறும் கூறும் வரும் இயல்களுள், முடிக்கும் வழி ஈறுகள் தோறும் விரித்து முடிப்பனவற்றை ஈண்டு ஓரோர் சூத்திரங்களாற் றொகுத்து முடிபு கூறினமையின் இவ்வோத்து இப் பெயர்த்தாயிற்று. இதுவும் புணர்ச்சி கூறுதலின் புணரியலை அடுத்து வைக்கப்பட்டது' என்ற கருத்தை இளம்பூரணர், நச்சினார்க் கினியர் ஆகிய இருவரும் கூறுகின்றனர்.

உயிர் மயங்கியலிலும், புள்ளி மயங்கியலிலும் சொல்லப்பட்ட அல்லது சொல்லாத செய்திகளை, அவ்விரண்டு இயல்களை அடுத்து வைத்துத் தொகுத்துக் கூறலாமே? அவ்வாறு கூறாமல் முன்னே கூறியதன் கருத்து என்ன? உயிர்மயங்கியல், புள்ளி மயங்கியலில் கூறப்பட்ட செய்திகள்தாம் இவ்வியலில் உள்ளன எனில், இதற்கெனத் தனி இயல் வேண்டுமா? அஃது அவ்வவ்விற்றின் இறுதியில் கூறியிருந்தால் என்ன? இதுபோன்றுதான் பின்னேயோ முன்னேயோ கூறப்போகும் அல்லது கூறிய செய்திகளைத் தொகுத்துத் தனி இயல் எனப் பெயர் சூட்டி நூலுள் வேறு எங்கேனும் கையாண்டுள்ளாரா? 171-ஆம் நூற்பாவில் கூறப்படும் அளவு நிறைப் பெயர்கள் பற்றிய முதல் எழுத்துப் பட்டியல் புணர்ச்சி கூறும் தொகைமரபில் வேண்டியதுதானா? அளவுப் பெயர்க்கும் நிறைப்பெயர்க்கும் கூறிய

www.thamizham.net - Free E book No 7421

வர் நாட்பெயர் திசைப்பெயர்க்கும் முதல் எழுத்துகளைக் கூருமல் விட்டதேன்? இவ்விருக்கள் நமக்குத் தரும் ஒரே செய்தி 'தொகை மரபு' என்ற தனி இயல் வேண்டா என்பதுதான்.

VI. உருபியல்: 'உருபுகளோடு பெயர் புணரும் இயல்பு உணர்த்தினமையின் இப் பெயர் பெற்றது. மேல் தொகுத்துப் புணர்த்த செய்கை ஈண்டு நின்றும் விரித்தும் புணர்க்கின்றமையின் தொகைமரபோடு இயைபுடைத்தாயிற்று, என்பது இருவரது விளக்கம். புணரியலில் முன்னுரை இடப்பட்ட (வேற்றுமை) சாரியைப் புணர்ச்சிதான்–இவ்வியல் முழுதும். உருபு புணரும் இயல்பு பற்றிக் கூறும்– இவ்வியல் 'உருபுப்புணரியல்' எனப்பெருமல் உருபியல் எனப் பெயரிடப்பட்டதன் அடிப்படை தெரியவில்லை.

முப்பது நூற்பாக்களுள் 180, 188, 189, 193, 197 என்ற ஐந்து நூற்பாக்கள் தவிர ஏனையன சாரியை புணரும் பாங்கைக் கூறுவன எனில் இவ்வியலைச் சாரியைப் புணரியல் என்று கூறிஞல் சிறக்கும் எனக் கருத்துத் தோன்றுகிறது.

VII உயிர் மயங்கியல்: உயிரீறு வன்கணத்தோடும் சிறு பான்மை ஏனைக் கணங்களோடும் புணரும் புணர்ச்சி கூறுதலின் இப்பெயர்த்தாயிற்று, மேற் பெயரோடு உருபு புணருமாறு கூறிப் பெயர் வருவழி உருபு தொக்குநின்ற பொருட் புணர்ச்சி' கூறுகின்ற மையின் உருபியலோடு இயைபுடைத்தாயிற்று என்பர் நச்சிஞர்க்கினி யரும் இளம்பூரணரும். இரண்டு காரணங்களும் பொருத்தமாய் இருக் கின்றன. ஆஞல் உயிர், மெய் புணரியல் எனக் கூருமல் உயிர் மயங் கியல், புள்ளி மயங்கியல் எனப் பெயரிட்டதன் அடிப்படை விளங்க வில்லை.

VIII. புள்ளி மயங்கியல்: 'உயிரீறு புணர்ப்புக்கூறி அடுத்து மெய்யீற்றுப் புணர்ப்புக் கூறுகிருர். புள்ளியீறு வன்கணத்தோடும் சிறுபான்மை ஏனைக் கணத்தோடும் புணருமாறு கூறுதலின் இப் பெயர் பெற்றது' என்ற விளக்கம் மிகப் பொருத்தமே.

IX. குற்றியலுகரப் புணரியல்: குற்றியலுகரமென்று கூறப் பட்ட எழுத்துப் பொருட்பெயரோடும் எண்ணுப்பெயர் முதலியவற் ருேடும் புணரும் முறைமை உணர்த்தினமையிற் குற்றியலுகரப் புண ரியல் என்னும் பெயர்த்தாயிற்று. இது, மெய்யே உயிர் என்று ஆயிரியல (104) என்றவற்றுள் உயிரினது விகாரமாய் நின்ற குற்றுகரத்தை இருமொழிக் கண்ணும் புணர்க்கின்றமையின் மேலை

www.thamizham.net - Free E book No 7421

ஒத்தின்றேடு இயைபுடைத்தாயிற்று என்று நச்சினார்க்கினியர் தரும் விளக்கம் நிறைவு தருகின்றது. எனினும் உயிரோடு தொடர்புடைய இவ்வியலை உயிர் மயங்கியலில் உகர ஈற்றேடு பேசி இருந்தால் நூற் சுருக்கம் ஏற்பட்டிருக்கும். இவ்வியலில் பெரும்பாலன எண்ணுப் புணர்ச்சி கூறுவனவே. எண்ணுப் பெயர்ப் புணரியல் எனக் கூறினும் இழுக்காது. ஆதலின் ஏனைய இயல்களில் ஆங்காங்கே எண்ணுப்புணர்ச்சியைக் கூறியுள்ளவர், (உருபியல்-199, 200, புள்ளி மயங்கியல்-318, 319, 320, 389, 390, 91, 92, 93, 94) அவ்வவ் விடத்தே இவ்வெண்ணுப் புணர்ச்சிகளைக் கூறியிருக்கலாமே!

குற்றியலுகரம்-மெய்போல உயிர் ஏற இடங்கொடுத்தலின் உயிருமன்று; மெய்போல அரைமாத்திரை பெற்றாலும் அது மெய்யுமன்று. இரண்டும் அல்லாத தனித்த எழுத்து, சார்புஎழுத்து என்பதால் தனி இயல் வகுத்தாரோ. என்னவோ?

எழுபத்தேழு நூற்பாக்களை உடைய இவ்வியலில் யாண்டும் உயிர் வருமொழியாயின் நிலைமொழி ஈற்றுக் குற்றியலுகரம் கெடும் எனத் தெளிவாகக் கூறாதது வியப்பாக உள்ளது. 'உயிர்வரின் உக் குறள் மெய்விட்டோடும்' என்ற நன்னூல் நூற்பா போன்று, தனி நூற்பா—யாதும் இவ்வியலில் காணுமாறில்லை.

தொல்காப்பியர் நூற்பா அமைத்த பாங்கு தனித்தன்மை உடையது. அதேபோன்று இயல் பகுப்பிலும் தனித்தன்மை தோன்றுகிறதா? புணரியலை அடுத்துவரும் ஆறியல்களும் புணர்ச்சிபற்றியே பேசுதலின்—அதனைப் புணரியல் என ஓரியலாகவும்; நூன்மரபிற்கும் மொழிமரபிற்கும் திட்டமான வேறுபாடு தெரியாமையானும், அவை பெரும்பாலும் எழுத்து, மொழி என்பனவற்றையே பேசுதலானும், அவை இரண்டையும் ஒன்றாக்கி எழுத்தியல் எனத் தனியாகவும்; பிறப்பியல் ஏனைய இயல்களில் அடங்காத தனித்தன்மை பெற்றதாதலான், அதனைத் தனியியலாகவும் சுருக்கிக் கொள்ளலாம். தொல்காப்பியரின் இயல் பகுப்பு தவறு என்பது நமது கருத்தன்று. தொல்காப்பியர் இயல் பகுப்புக்குக் கொண்ட அடிப்படை நமக்கு விளங்கவில்லை என்பதே கருத்து. மேற்காணும் ஒன்பது இயல்களை 1. பிறப்பியல், 2. எழுத்தியல், 3. புணரியல் என்று அமைத்துக் கொள்ளலாம். இந்த முடிவு தொல்காப்பியர், பாணினி பகுத்த ஒன்பது என்ற எண்ணிக்கையைப் பின்பற்றினரா என்பதற்கு விடை யாகாது. O

www.thamizham.net - Free E book No 7421

"பொதுவுடைமைத் தோழனே, விழித்தெழு"

பறம்பை. அறிவன்,
உ. த, க. வட்டச்செயலர், பறம்புக்குடி முகவை மாவட்டம்.

'உரிமைக் கடிப்படை உயிர்ப்போ ராட்டம்' என்கிறார் பாவலர் அரிமா துரை-மா. ஒரு மொழி தனக்குரிய துறைகளில் ஏற்றம் பெற அதற்கு உரிமையுண்டு. அவ்வுரிமையினை நிலைநாட்ட அம்மொழி யினமக்கள் போராட்டம் நடத்தித் தீரவேண்டும். மார்க்சிடம் "தாங்கள் பேரளவு வெறுப்பது எதனை "என்று கேட்டபொழுது 'அடிமைத்தனம்' என அறைந்தார். அந்த மார்க்சின் வழிமேல், விழிவைத்துச்செல்லும் தோழனே, உனக்குத் தமிழ்நாட்டுப் பொதுவுடைமைக் கட்சி காட்டிய வழியினைத் திரும்பிப்பார்.

'எகலின்' "ஒரு குற்றவாளியின் தவறான எண்ணத்திற்குக்கூட வீட்டின்பத்தின் வியப்புகளைவிடப் பேரளவு பெருமையும் கண்ணிய மும் உள்ளன" என்ற மேற்கோளை அடிக்கடி எடுத்துக்காட்டும் காரல் மார்க்சின் வழியை மதிப்பவனே, உனக்கொரு சொல்;

"மொழியின் தூய்மையும், பிழையின்மையும் தொடர்புற்ற வகையில் அவர் மிகவும் அறநுட்பத்தோடு நடந்துகொண்டார்"

"மார்க்சு தூய நடைகாரர்; சரியான விளக்கத்திற்காக அவர் நீண்டநேரம் மிகவும் தொல்லைப்பட்டுத் தேடியலைவார். தேவையில் லாமல் பிற மொழிச் சொற்களைப் பயன்படுத்துவதை அவர் வெறுத் தார்."

என்ற மேற்கோள்களைக்காண். இவை, மாசுகோ அயல்மொழிப் பதிப்பக வெளியீட்டில் உள்ள வரிகள். "வில்கெல்ம் லீப்க்னெஃட்" என்பார் மார்க்சு பற்றிக் கூறிய இதனை எண்ணிப்பார்.

"மொழித் தூய்மைக் கொள்கைகளை ஒதுக்கித் தள்ளிவிட்டு ஒரே வகையான கலைச் சொற்களை ஆக்கவேண்டும்" என்று முரண்படும் கருத்தை 'அசாயிகோசு' 1957-இல் கூறியுள்ளார்! மொழித்தூய்மைக் கொள்கையை ஒதுக்கித்தள்ள வேண்டும் என்று கூறும் கையாலாகாத் தன்மை கண்டு மனம் நோகாமல், நீ தாய்மொழியை மாசுபடுத்த லாமா?

www.thamizham.net - Free E book No 7421

'ஒரே வகையான சொற்கள்' எப்படி உருவாக முடியும்? தூய தாய்மொழி வழி, ஒரு பொருட்கு ஒரு சொல் நிறுவ முடியும்—உலக மெல்லாம் அப்படி ஒரு சொல்லே உருவாக்க முடியும் என்பது மொழியை வெறும் கருவியாகமட்டும் கருதுவாரின் கனவாகும். இக் கனவு முயல் கொம்பால் ஈட்டி செய்யக் கனவு கண்ட தொக்கும்.

மொழித் தூய்மைக் கொள்கையை மார்க்சு கையாண்டார் என்ப தைக் கண்டறிந்தும் அதனைப் புறக்கணிப்பதேன்? அக் கொள்கை யினரைக் கலந்து, புதிய வழிகாண அறிவியல் வழி முற்படாமல், அரசியல் காழ்ப்புணர்ச்சி கொண்டு உண்மையை ஒதுக்காதே!

நடையைப் பலமொழிச்சொற் கலவையாக்கித் தடுமாறுதே. உன் கொள்கை விளக்க ஏடுகளை இளைஞர்படை எடுத்துப் படித்தல் வேண்டாவா? தாய்மொழி ஒன்றே அறிந்த ஏழை உழவர் மக்கள் புரிந்து கொள்ளல் வேண்டாவா? நண்பா! உன்வழி தமிழ்வழி. அதன் வழி உன் பொதுமை உணர்வை ஊன்றுக. விழி, எழு! O

மொழிப்பேரறிஞர். தேவநேயப் பாவாணரின்

திருக்குறள் தமிழ் மரபுரை

விலை உரு. 15-00

கிடைக்குமிடம்- **திரு. தே. மணி,**

ஆ-1135, இரண்டாம் மேற்குக் குறுக்குச்சாலை,

காட்டுப்பாடி விரிவு (வ. ஆ)

பாவலர். பெருஞ்சித்திரனாரின்

அரிய தமிழ் நூல்கள்

			உரு.	காசு.
1.	பாவியக்கொத்து	விலை	2 —	50
2.	எண்சுவை எண்பது	,,	1 —	50
3.	புரட்சிப்பாவலர் பாரதிதாசன்	,,	0 —	50

அஞ்சற் செலவு தனி.

கிடைக்குமிடம்:- தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.

---

www.thamizham.net - Free E book No 7421

விண்வெளியிலிருந்து தொல் உயிரெச்சங்கள்

இரா. ஆறுமுகம்,
தி. ந. பக்கிரி சங்கர்.

தொல் உயிரெச்சங்கள் அல்லது புதையுயிர்த்தடங்கள் (Fossils) ஒருகாலத்தில் இயற்கையின் விளைவுகளாகவும், சில வியப்பான பொருட்களாகவும், கடந்த காலத்தில் நடந்த நிகழ்வுகளை மாந்தனுக்கு உணர்த்தும் கருவியாகவும் பயன்பட்டன. ஆனால், அறிவியலின் வளர்ச்சிக்கிணங்க அவை நிலவுலகிற்கு அப்பாற்பட்ட உலகத்திலுள்ள உயிரினத்தைப் பற்றிய சான்றுகளைக் கொண்டிருக்கும் கருவிகளாகவும் இன்று கருதப்படுகின்றன். விண்ணிலிருந்து கற்கள் அல்லது கற்றுகள்கள் வடிவிலே விழுகின்ற விண்கற்களிலிருந்து (Meteors) தொல் உயிரெச்சங்கள் பல உள்ளன என்று நுணங்காய்வினர்கள் விளக்குகின்றனர்.

ஒரு நாளைக்குப் பத்து இலக்கம் விண்கற்கள் காற்று மண்டலத்தை (Atmospheric region) அடைகிறதாகக் கண்டறிந்துள்ளனர். இவற்றில் பல காற்று மண்டலத்திலுள்ள உயிரியத்தின் (Oxygen) சேர்க்கையால் எரிந்து விடுகின்றன. மற்றவை கடலிலோ, நீண்ட இடப்பரப்புகளிலோ விழுகின்றன. 'அரிசோனா' (Arizona) என்னும் இடத்தில் விழுந்த பெரிய விண்கல்லே இதுவரை கிடைத்தவற்றுள் மிகப் பெரியதாகும். இஃது ஒரு சதுரக்கல் பரப்பினையும், 600 அடி பள்ளத்தினையும் உண்டாக்கியிருக்கிறது. இது மிக விரைவாக நிலத்தின் மீது மோதியதால் சுற்றிலும் துகள்கள் தெறித்து விழுந்திருக்கின்றன. இந்த இடத்திலிருந்து எடுக்கப்பட்ட சிறு விண்கற்களை (அல்லது) பகுதிகளைச் சில நாடுகளில் உள்ள பொருட்காட்சிச் சாலைகளில் இன்னும் வைத்துக் காத்து வருகின்றனர்.

இவ்விண்கற்கள் எங்கிருந்து வருகின்றன என்று நம்மால் துல்லியமாகத் தெரிந்துகொள்ள இயலாவிடினும், இவை நமது கதிரவக் குடும்பத்திற்கு (Solar system) அப்பாற்பட்ட இடத்தினின்றும் வருவனவாக நாம் உறுதியாய்க் கொள்ளலாம். 'அண்டவெளியில் உள்ள மற்றுமொரு கதிரவக் குடும்பத்தினின்றும் இவை வீசப்படுகின்றன என்றும் சிலர் கொள்வர்.

www.thamizham.net - Free E book No 7421

நிலவுப் பரப்பில் உள்ள பல பள்ளங்களும் இவ்விண்கற்களால் உண்டாக்கப்பட்டவையே. இப் பள்ளங்களில் மிகப்பெரியது 75 சதுரக் கற்கள் பரப்பினையும் 2 கற்கள் ஆழத்தினையும் உடையதாகும். அண்மையில் நிலவைச்சுற்றிய வான்வெளி மறவர்கள், புயற்காற்றினூடே வீழும் ஆலங்கட்டிகளைப் (Hail storm) போல் விண்கற்கள் நிலவின் மீது விழுந்தனவாகக் கண்டறிந்துள்ளனர். இதுவரை சேர்க்கப்பெற்ற விண்கற்கள் கற்றுகள்களால் ஆனவையாகவும், இரும்புத் துகள்களாலனவையாகவும், கரித்துகள்களால் ஆனவையாகவும் உள்ளன. நுணங்காய்வினர் சிலர் கருத்துப்படி இவற்றில் இறுதியில் குறிப்பிட்ட இரண்டிலும் உயிர் வாழ்வுக்கான சுவடுகள் காணப்படுகின்றன. அவர்களுடைய கருத்து, கரி (Carbon) உயிரின் முகாமையான அணுவாக இருக்கிறது என்னும் உண்மையிற் அடிப்படையில் எழுந்தது ஆகும்.

உயிர்ப்பொருள்கள் நீரியக்கரி (Hydrocarbon) என்னும் கரியின் அணுத்திரள் கூடிய கூட்டுப் பொருளினுல் ஆனவை. எனவே, அறிவியல் அறிஞர்கள் நீரியக்கரியை விண்கற்களிலே கண்டு விண்வெளிப்பொருள்களில் உயிரினங்கள் உழல்வதாகக் கருதுகின்றனர். உயிர்ப்பொருள்களின் உதவியின்றியே ஆய்வகத்தில் நீரியக்கரியை ஒன்றுய் இணைத்தல் இயலும் என்னும் கூற்றுல் முன்கூறியவற்றை எதிர்ப்பாரும் உளர்.

விண்கற்களில் உயிர்கள் வாழுகின்றன என்பதை உறுதிப்படுத்த நிறுவும் சில சான்றுகளை இனி நோக்குவம். 1961-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 17-ஆம் நாளன்று வெளியான "நியூயார்க் டைம்சு" என்னும் அமெரிக்கச் செய்தித்தாளில், "சென்ற நூற்றுண்டில் பிரான்சில் விழுந்த விண்கல் ஒன்றைத் தற்போது புதிய பகுப்புச் செய்து ஆராய்ந்ததில், மண்ணில் உயிர்வாழும் நிலைத்திணை, விலங்கு போன்றவற்றின் வேதியல் பொருள்களை ஒத்திருக்கும் வேதியல் கூட்டுப் பொருள்கள் இவ் விண்கற்களில் இருக்கின்றன என்று கண்டு பிடிக்கப்பட்ட செய்தி ஒன்று வெளியிடப்பட்டிருக்கிறது. பேரண்டத்தில் உயிர்கள் உழலுகின்றன என்பதற்கு இதுவே முதற் சான்றுய் அமைகிறது. இதற்குப்பின், அறிவியல் அறிஞர்கள் 'சோளாஃச்டிரல்' (Cholesterol) என்னும் ஒருபொருளைக் கண்டறிந்தனர். அப்பருப்பொருள் நெஞ்சாங்குலையினின்றும் அரத்தம் கொண்டு செல்லும் நரம்பி (Artery)னுள் தங்கி அங்குள்ள துளைகளை

www.thamizham.net - Free E book No 7421

அடைத்து மாரடைப்புக்குக் காரணமாகின்றது என்றும் கண்டறிந்தனர்.

பின் 1961-திசம்பரில் அறிவியலறிஞர்களிடமிருந்து முன்னதை விட மிகவும் இன்றிமையாத அறிவிப்பு ஒன்று வெளியானது. விண் கல்லினின்றும் எடுக்கப்பட்ட செடியின் தொல் உயிரெச்சத்தினை ஆராய்ந்ததாக அதில் வெளியிட்டிருந்தனர். அவற்றில், ஐந்து செடிகளை உருப்பெருக்கி (Microscope)யின் மூலம் நன்கு ஆய்வு நடத்தியதில் அவற்றில் நான்கு நிலத்திலுள்ளவை போன்றே உயிர் வாழ்ந்த தாய்க் கண்டுபிடிக்கப்பட்டன. ஐந்தாவது, நிலத்திலுள்ள எவ்வுயிரினத்தையும் ஒத்திருக்க வில்லை. இதைத் தொடர்ந்து நியூசிலாந்து (Newzeland)யிலிருந்து கண்டெடுக்கப்பட்ட மற்றொரு விண்கல்லினின்றும் முன்கூறியது போன்றே தொல் உயிரெச்சங்கள் கண்டெடுக்கப்பட்டன

இன்னும் பல கண்டுபிடிப்புகள் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றன. அண்மையில் நிலவின் பரப்பில் இறங்கிய அமெரிக்கர்கள் இந்தப் பொருளை விளக்குவார்கள் என்று நம்பப்படுகின்றனர். நிலவில் உள்ள பள்ளங்களினால், விண்கற்களிலுள்ள தொல்உயிரெச்சங்களைப் பற்றிய குறிப்புகளைத் தெளிவாகப் பெறல் இயலும். ஏனெனில் அங்கு வளி இல்லாததால் விண்கற்கள் நிலவின்மீது விழும் போது எரியா. இத்தொல் உயிரெச்சங்கள் உயிருள்ளவற்றைப் பெற்றிருந்தன என நிறுவிவிட்டால், அதனின்றும் நமது கோளின் மீதுள்ள உயிர் வாழ்க்கையின் கருவினைப்பற்றிச் சில குறிப்புகளைப் பெறலாம். உலகின் மீதுள்ள உயிர்ப்பொருள்கள் விண்வெளியிலிருந்து விண்கற்கள் மூலமாக உலகை அடைந்திருக்கக்கூடும் அன்றோ? O

— முகவர்கள் கவனிக்க.

முகவர்கள் அவ்வம்மாதப் பட்டியல் தொகைகளை நினைவூட்டறிக்கை கிடைத்தவுடன் விடுத்து வைக்கவும்.

சிலர் இரண்டு, மூன்று மாத நிலுவைத்தொகை விடுக்காமல் இருப்பதும்-அன்றி, தொகுத்து விடுப்பதாக மடல் விடுக்கின்றனர். இது பெரிதும் வருந்தத்தக்கது.

மற்றும், தென்மொழி-தமிழ்ச்சிட்டு பட்டியல் நிலுவை விடுக்கும் அன்பர்கள் "ஆசிரியர்,, அல்லது 'அமைச்சர்'' என்று முகவரி எழுதி விடுக்கவும். ஆசிரியர் பெயருக்கு அன்றி, தனிப்பட்ட எவர் பெயருக்கும் அனுப்புதல் கூடாது. அமைச்சர்.

www.thamizham.net - Free E book No 7421

தென்மொழிக்கு நன்கொடை.

15-1-69 முதல் 20-2-69 முடிய, தென்மொழி வளர்ச்சியில் அக்கறையும் ஆர்வமும் கொண்ட அன்பர்கள் விடுத்த நன்கொடைப் பட்டியல் வருமாறு. ஒல்லும் வகையில் அறவினை ஓம்பும் அத்தமிழ் நெஞ்சங்கட்கு நம் நன்றியும் வாழ்த்தும் உரியவாகுக.

		உருபா.		காசு
1.	கோ. மு. செல்வத்துரை, மேற்குமாம்பலம், சென்னை.	1	—	50
2.	Cpl. Lakshmanan, Bikaner, Rajasthan.	2	—	00
3.	Cpl. டேனி நாகூர், மே/பா. 56-ஏ. பி. ஓ.	2	—	00
4.	Lac. விசயராகவன், மே/பா 56-ஏ. பி. ஓ.	1	—	00
5.	Ac. அரங்கராசன், பெங்களூர்.	1	—	00
6.	LAC. நாகராசன், மே/பா. 56-ஏ. பி. ஓ.	2	—	00
7.	CPL. பதினெட்டாம்பதி, மே/பா. 56-ஏ. பி. ஓ.	2	—	00
8.	மறைமலையடிகள் மன்றம், பு. புளியம்பட்டி.	6	—	00
9.	திரு. கோ. மு. பெருமாள், தக்கலை (குமரி மா. வ.)	2	—	00
10.	திரு. ஆ. இரெக்சு, சென்னை-21.	6	—	00
11.	திரு. எழிற்செல்வன், எதுமலை (திருச்சிமாவட்டம்)	2	—	00
12.	திரு. இளங்கீரன், ஆசிரியர், முதலைப்பட்டி.	1	—	00
13.	திரு. துரையரசன், சைதாப்பேட்டை, சென்னை.	2	—	03
14.	திரு. ஏ. எசு. கே. மூர்த்தி, பெரோசுபூர் (பஞ்சாபு)	1	—	00
15.	திரு. இராம. வீரப்பன், காரைக்குடி-2.	1	—	00
16.	திரு. அ. சு. கோவிந்தசாமி, புதுக்கோட்டை.	20	—	00
17.	திரு. மருதக்கிழான், சேலியமேடு (புதுவை மாநிலம்)	1	—	00
18.	திரு. இராச. துரையரசு, சென்னை-15.	1	—	00
19.	சென்னை இசுடான்லி மருத்துவமனை அன்பர் ஒருவர்.	50	—	00
20.	செயலர், மறைமலையடிகள் மன்றம், பு. புளியம்பட்டி.	6	—	00
21.	திரு. செ. கிட்டுசாமி, கருணைப்பாளையம் (கோவை)	2	—	00
22.	திரு. எசு. அவநாசியப்பன், கருக்கன்காட்டுப் புத்தூர்	2	—	00
23.	திரு. வேங்கடாசலபதி ஷெ	2	—	00

www.thamizham.net - Free E book No 7421



"அச்சாகும் நூலெல்லாம் நூலாமோ? ஆங்குசிலர்
மெச்சியுரை செய்வதனுல் மேலாமோ—முச்சில்
புடைத்துலையில் இட்ட புதுமணலைச் சோருய்ப்
படைத்துவிட லாமோ பசிக்கு!"

நிலவுப்பூ

ஆசிரியர்: சிற்பி. பாலசுப்பிரமணியம், எம். ஏ.,
வெளியிட்டோர்: மணிவாசகர் நூலகம், சிதம்பரம்.
விலை: உரு. 3-00.

இன்ஞான்று தமிழ்நாட்டில் உள்ள பாவலர்கள் இருவகையினர் ஆவர். முதற் பிரிவினர் தாம் காணும் காட்சியோடு மனம் ஒன்றப் பெற்று, அதன் பயனுகச் செய்யுளியற்றும் உணர்விஞல் உந்தப் பட்டுச் சொல்லும் பொருளும் தொடர்ந்துவரத் தங்குதடையின்றிப்

(முன்பக்கத் தொடர்ச்சி)

24.	திரு. அரங்கசாமி ஷை	2	—	00
25.	திரு. க. க. ஆறுமுகம், கருக்கன்பாளையம்.	2	—	00
26.	திரு. அ. இராமசாமி, அவநாசி (கோவை மாவட்டம்)	2	—	00
27	திரு. சி. நாச்சியப்பன், காரைக்குட்டைப்புதூர்.	2	—	00
28,	திரு. க. இளவன், பஞ்சலிங்கம்பாளையம்.	2	—	00
29.	திரு, நடராசன், காசியக்கவுண்டன்புதூர்	2	—	00
30.	திரு. தே. க. சுப்பிரமணியன், தேவராயன் பாளையம்	2	—	00
31.	திரு. அ. துரைசாமி, அவநாசிலிங்கம்பாளையம்.	2	—	00
32.	திரு. ப. துரைசாமி, ஈ. கி. குமரன்புரம்.	2	—	00
33.	திரு. அரங்கசாமி காரைக்குட்டைப்புதூர்.	1	—	00
34.	திரு. வீ. சீதாராமன், ஆசிரியர், உ. நெமலி.	1	—	00
35.	திரு. செ. மச்சபாலகிருட்டிணன், பத்துக்காசா (மலேசியா)	5	—	00

அமைச்சர், தென்மொழி

www.thamizham.net - Free E book No 7421

பாடல் யாப்பவர். பிறிதொரு சாரார், செய்யுள் இயற்றுதற்குரிய தொரு சூழலை (ஏதுவை) தாமே வலிந்து உருவாக்கிக்கொண்டு, அதற்கேற்ற இன்பதுன்ப உணர்வுகளைத் தாமே செயற்கையாகப் படைத்துக்கொண்டு, அவ்வுணர்வுகளைப் புலப்படுத்தற்கேற்ற சொற்களையும் கருத்துகளையும் தேடிப்பிடித்துப் பாடல் இயற்றுவர். இவ்விருவகையினருள் முதற்பிரிவினரில் வைத்தெண்ணத்தக்க திரு. பால சுப்பிரமணியம் அவர்கள் இயற்றியுள்ள இந்நூலின் பாடல்கள் பொதுவாகக் கருத்தோட்டமும் சொல்வளமும் உடையனவாய் அமைந்துள்ளன.

பாரதி எங்கள் கண்மணி, பாரதிதாசன் என்னும் பாடல்கள் பாவலரின் புலமைத்திறனுக்குப் போதிய சான்றுகளாம். செந்தாமரை, மழை, நிலவுப்பூ, மலைச்சாரல், வானவில், ஓவியன் ஆகிய பாடல்கள் கற்பனைவளம் செறிந்து விளங்குகின்றன.

"ஓலமிடும் ஆழ்கடலின் மேலே" எனத் தொடங்கும் (கடல்) பாடல், "முட்புதர்கள் மொய்த்ததரை எங்கும்" எண்ணும் பாவேந்தர் பாடலையும், "செழிப்பிலே திகழ்ந்து" எனத் தொடங்கும் (அழகு வையம்) பாடல் "பொருப்பிலே பிறந்து" என்னும் வாந்தருவார் பாடலையும் நினைவூட்டுவனவாய் ஆசிரியரின் சொல்வன்மையைப் புலப்படுத்தி நிற்கின்றன. மற்றும்,

"வானமுற் றத்தினில் மேகப் பெருங்குப்பை
வந்து திரண்டதுவாம்—அதோ
கான மிசைத்திடும் காற்றினைக் கூப்பிடு
காட்டி விலக்கிடுவோம்" (காட்சியும் கருத்தும்)

"சின்னஞ் சிறுமலர்க்கை கொட்டி—நெஞ்சம்
சிலிர்க்கக் குறுஞ்சிரிப்பைக் காட்டி,
பன்னும் மழலைப்பழச் சாற்றை—அள்ளிப்
பருக பருகவென ஊற்றிப்
பச்சைப் பசுங்குழவி பேசும்—தமிழ்ப்
பண்ணும் வானமுதும் கூசும்!" (மழலைக்காலம்)

என்பன போன்ற சொல்லோவியங்கள் ஆங்காங்கே காணக்கிடக்கின்றன.

மின்னல்கொடி, தெய்வத் தமிழ்க்கவிஞன், மனிதனும் இயற்கையும், கவிஞன் நெஞ்சம், போதுமடா போதும் ஆகிய பாடல்கள் இன்றைய மாந்தவினத்தின் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டும் நிலைக்கண்ணாடிகளாகத் திகழ்கின்றன.

www.thamizham.net - Free E book No 7421

"ஆங்கிலப் பூங்கா"வில் குயிலுக்கு, வழிப்போக்கன் என்னும் இரு பாடல்களும் சிறப்புற அமைந்துள்ளன.

"பாட்டாளி யையுறிஞ்சும் செல்வன் போலப்
பரந்தகடல் நீருறிஞ்சி"
"தோட்புறத்தை இழந்தவினங் கைம்பெண் வாழ்க்கைத்
துயரைப்போல் மிகவிருண்டு"

என்பன போன்ற புதிய உவமைகள் பாராட்டத்தக்கன.

எனினும், இந்நூலிற் குறிப்பிடத்தக்க சில குறைபாடுகளும் உள்ளன. ஆசிரியரின் முன்னுரையிலேயே கவிதை, விமர்சனம், இதயம் போன்ற வடமொழிச் சொற்கள் காணப்படுகின்றன. பாடல்களில் கோரம், ரோஜா கோபியர், சாந்தி, மரகதம், வசந்தம், தயை என்பன போன்று ஆங்காங்கு ஆரியச் சொற்கள் விரவியுள்ளன.

"பொருத போர்க்களம்" (செந்தாமரை), "கொஞ்சு தமிழ் உதடுகளில் கொஞ்ச வந்தாய்" (யார்நீ, என்பன போன்று கூறியது கூறலாய் அமைந்துள்ள பகுதிகள் பலவாம்.

கவிதை எனும் பாடலில், "பித்து மனவெளியில் பிறந்த கனவலைகள்" "பண்ணின் சிறகசைத்துப் பாய்ந்தேகும் ஒளிப் பறவை" என்பன போல், செய்யுளோசை பிறழவரும் அடிகள் பலவுள.

கூசுது' (அவனும் அவளும்) 'மனதில்' (கல்லறைக் கன்னி) என்பன போன்ற வழுச்சொற்கள் பாடலின் மதிப்பைக் குறைக்கின்றன.

மற்றும் சில: "மயிற் பேடொன்று தோகை விரித்திடக்கண்டு" (ஊடற்சித்திரம்) என்கிறார் பாவலர். ஆண் மயிலன்றோ தோகைவிரித்தாடும்! பெட்டைக்குத் தோகை யில்லையே!

"பரந் தோங்கிவரும் தேனலைகளாலே" (கடல்) என்கிறார். தேனுக்கும் அலைகளுக்கும் என்ன ஒப்புமையோ?

"கானலைக் கழனி செய்யும் உழவர்" (மனிதப்புள்) என்று சொல்கிறார். உழவர்கள் கானைக் (காட்டைக்) கழனி செய்வார்களேயன்றி, கானலையா கழனி செய்வார்கள்?

இனி, பதிப்பாசிரியர் திரு. ச. மெய்யப்பன் செய்துள்ள பெரும்பிழை செய்யுள் அடிகளை ஓசை பிறழுமாறு சீர்பிரித்துப் பதிப்பித்ததாம். "பனிமுத்தம்" என்ற பாடலில் 'புன்னைப் புதுப்பூவில் பொன்வண்டு

www.thamizham.net - Free E book No 7421

பாடுகையில்" என அமைய வேண்டிய வரியை, "புன்னைப் புதுப் பூவில் பொன்வண்டு பாடுகையில்" எனச் சீர்பிரித்துப் பதிப்பித்துள்ளார். இதுபோன்ற இடங்கள் நூற்றுக்கணக்கில் இந்நூலில் உள்ளன. இதனால் நூலின் சிறப்பே குன்றிவிடுகின்றது எனத் துணிந்து கூறலாம். —நக்கீரன்.

பாடுகின்ற நிலா

ஆசிரியர்: ஞானச்செல்வன்.
வெளியிட்டோர்: அறிவு நிலையம், திருவாரூர்.
விலை: உரு. 2–00.

பாரதியாரைப்போல், பாரதிதாசனைப்போல் தாமும் பாவலராக விரும்பி, அவர்களின் நூல்களை முயன்று பயின்று, அவற்றிலுள்ள சில பாடல்களை யொட்டிச் செய்யுள் செய்து, அவ்வளவானே தாமும் பாவலரெனத் தருக்கித் திரிவோர் இந்நாட்டிற் பலருளர். பாவன்மை என்பது ஒருவற்கு இயற்கையில் அமையும் ஆற்றல் என்பதையும், நூலறிவினால் அதை வளர்த்துக் கொள்ளலாமே யன்றிப் படைத்துக் கோடல் இயலாதென்பதையும் இத்தகையோர் எண்ணிப் பார்ப்பதில்லை.

திரு. ஞானச்செல்வர் இக்குழுவில் இடம்பெறத் தக்கவரே என்பதை இந்நூல் புலப்படுத்துகிறது.

அருள் வேண்டல் என்னும் முதற்பாடல், பாவேந்தரின் "ஆடுகின்றாய் உலகப்பா" என்னும் பாடலை அடியொற்றிச் செய்யப்பட்டுள்ளதேனும், அந்தப்பாட்டில் அமைந்த சொல்வளமோ, பொருட்செறிவோ இதிற் காணப்படவில்லை. வீணே சொற்களைத் தெற்றி வைத்த போலிப் பாடலாகவே தோற்றம் அளிக்கிறது.

இப்பாடலில் "தமிழப்பா" என்னும் சொல், பொருள் வேறுபாடின்றி மூன்றிடங்களில் கையாளப்பட்டுள்ளது. முன்னமே வேலேந்திய முருகனைப் பார்த்து ' தாங்கப்பா வேலப்பா" என்று இவர் கூறுவது வேடிக்கையாக உள்ளது.

தமிழ்த்தாய்க்குக் காணிக்கை என்ற பாடலில் சீர்கெட்டிருப்பதைக் காணலாம். புகாரில் ஒருநாள் பொற்பதக்கம் பெற்ற பாடல் என்று குறிக்கப்பெற்றுள்ளது. ஆனால் அப்பாடலில் குறைபாடுகள் பலவுள. "பூவிரியும் சோலைகளின் புதுமணத்தை அள்ளியுண்டு' என்கிறார். மணத்தை நுகர்வார்களேயன்றி, உண்பதில்லை! மற்றும்

www.thamizham.net - Free E book No 7421

"தாலே அசைத்தொரு தமிழ்ப்பாட்டுப் பாடலுற்றேன்" என்ற அடியில் நிரையொன்றாசிரியத்தளை வந்துள்ளது. வெண்கலிப்பாவில், வெண்டளையும் கலித்தளையும் அன்றிப் பிறதளைகள் வருதல் சிறப்பின்று. வெண்கலிப்பாவிற் கேலாத தனிச்சீர்களும் வந்துள்ளன. பொதுவாக நோக்குமிடத்து, இப்பாடல் அல்லி அரசாணி மாலை, தேசிங்குராசன் கதை போன்று அமைந்துள்ளதே யன்றி, இலக்கியம் என்று கருதத்தக்க வகையில் நடையுயர்வு கொண்டதாய் அமையவில்லை.

ஓ! சின்ன பாப்பா! என்ற தலைப்பில் வேண்டாத இடத்தில் (சின்னப்பாப்பா) ஒற்று மிகுந்துள்ளது. விரக்தி, இதயம் போன்ற வடசொற்கள் தலைப்புகளிலேயே இடம்பெற்றுள்ளன. பாரதி அந்தாதியில், இறுதிப்பாடலின் கடைசியடியில் "எக்காலும் முயல்வாய் இசைந்து" எனக் கலித்தளை வந்துளது. பாரதி கும்மியில் "பாடுங்கள் மக்கள் பாடுங்கள்" என்ற அடியில் ஓசை குறைகின்றது.

பாடிவந்த நிலா எனும் பெயருடைய இந்நூலில், அத்தலைப்புக் கொண்ட பாடல் எதுவும் இல்லை. ஒருவேளை, ஆசிரியர் தம்மையே பாடிவந்த நிலா என்று குறித்துக்கொண்டாரோ! அப்படியானல், நிலவின் ஒளியிற் காணப்படும் எழிலும் குளிர்ச்சியும் இவர் பாடல்களில் ஒரு சிறிதுதானும் இல்லையே! —நக்கீரன்.

தென்மொழி-கடலூர்-I.

[உலகத் தமிழ்க் கழகச் செய்திகள் முழுமையாகத் தொடர்ந்து வரும் ஒரே இதழ்]

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.

ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்:	9 உருபா.	10-50 உருபா.	13 உருபா.
தனி இதழ் :	75 காசு.	90 காசு.	1 உருபா.

www.thamizham.net - Free E book No 7421

குள்ள மாந்தர்!

மு. மகிழ்நரசன்.

1. நல்லவரைப் பழிக்கின்றார்; நடுத்தெருவில் நிறுத்துகின்றார்;
  நன்மை செய்யும்
வல்லவரை இழிக்கின்றார்; வாய்மையுளம் வருத்துகின்றார்;
  வஞ்ச மாகப்
புல்லுரைகள் நுழைக்கின்றார்; புனைகதைகள் பொருத்து
  புரட்டுச் செய்தும் [கின்றார்;
தொல்லைகளை இழைக்கின்றார்; தூயவரைத் துரத்துகின்றார்;
  நெஞ்சே! நெஞ்சே!

2. உண்மைகளை மறைக்கின்றார்; உயர்மனத்தை ஒடுக்குகின்றார்;
  உரஞ்சால் செய்கைத்
திண்மையரை நெரிக்கின்றார்; திரண்டெழுந்து நடுக்கு
  தீங்கி ழைக்கும் [கின்றார்;
வெண்மையுரை விரிக்கின்றார்; வெல்கணைகள் முடுக்கு
  வெறிகொள் நெஞ்சால் [கின்றார்;
அண்மையிலே இருக்கின்றார்; அவர்தொழிலை அடுக்கு
  நெஞ்சே! நெஞ்சே! [கின்றார்;

3. சொத்தைகளைப் போற்றுகின்றார்; சொந்தமெனக் குலவு
  சொல்சொற் கேட்டுத் [கின்றார்;
தத்தையெனச் சாற்றுகின்றார்; தைதையென உலவுகின்றார்;
  தயங்கா மல்மேல்
எத்தர்களை ஏற்றுகின்றார்; ஏற்றமுடன் நிலவுகின்றார்;
  ஏய்த்து வாழ
எத்தனையோ ஆற்றுகின்றார்; எதைஎதையோ செய்கின்றார்;
  நெஞ்சே! நெஞ்சே!

4. உண்டென்று செப்புகின்றார்; ஒருநொடியில் உள்ளதைப்பின்
  இலைஎன் கின்றார்;
கண்டென்று சப்புகின்றார்; கண்ணிமைமுன் கசப்பென்று
  மனம்கைக் கின்றார்;
விண்டொன்று பதைக்கின்றார்; விளையாட்டாய்ப் பிறர்க்குத்
  வினைசெய் கின்றார்! [தீ
நொண்டொன்று வதைக்கின்றார்; நோகாமல் சிரிக்கின்றார்;
  நெஞ்சே! நெஞ்சே!

5. பெரியவர்போல் திரிகின்றார்! பெரும்பகட்டுப் புரிகின்றார்;
  பிறர்த மக்கே
உரியவர்போல் பரிகின்றார்; உரையுயிர்போல் சொரி
  உறவி னுக்கோர் [கின்றார்;

www.thamizham.net - Free E book No 7421

கரியவர்போல் கரைகின்றார்; கரும்பினைப்போல் தெரி
கரிக்கும் நெஞ்சால் [கின்றார்;
நரியவர்போல் இருக்கின்றார்; நெருப்பினைப்போல் எரிக்
நெஞ்சே! நெஞ்சே! [கின்றார்;

6. இனியவர்போல் வருகின்றார்; இன்முகத்தை விரிக்கின்றார்;
இன்பம் சேர்க்கும்
கனியவர்போல் தெரிகின்றார்; கன்னல்மொழி தருகின்றார்;
கனிவு நெஞ்சில்
தினையளவும் பயிலாது திரிகின்றார்; தூயவர்க்குத்
தீங்கு செய்ய
எனையளவும் முயல்கின்றார், எவ்வினையும் பயில்கின்றார்:
நெஞ்சே! நெஞ்சே!

7. பெரியவரைச் சிறியவராய்ப் பேசுகின்றார்; புன்மனத்தால்
பேய்மைப் பண்புக்கு
உரியவரைப் பெரியவராய் ஊக்குகின்றார்; தீயவரே
உய்யப் பேணித்
திரியுமன வெறியவராய்த் திகழ்கின்றார்; திபுதிபெனத்
தாவு கின்றார்;
எரியவராய்ப் பாய்கின்றார்; எளியவரைக் காய்கின்றார்;
நெஞ்சே! நெஞ்சே!

8. மூத்தவராய் இருக்கின்றார்; முழுமடமை விரிக்கின்றார்;
முழங்கும் நெஞ்சம்
பூத்தவராய்க் குதிக்கின்றார்! பூவுலகை அதிர்க்கின்றார்;
பதவி, பட்டம்
வாய்த்தவராய் இருக்கின்றார்! வாய்மை, அறம், நேர்மை,
அன்பு பண்பால் [கனி(வு)
நோய்த்தவராய் அழிகின்றார்! நோன்றுலகை அழிக்கின்றார்!
நெஞ்சே! நெஞ்சே!

9. வல்லாண்மை நீட்டுகின்றார், வலிமைகளைக் காட்டுகின்றார்;
வஞ்சம் தோய்ந்த
சொல்லாண்மை தீட்டுகின்றார்; சோர்வினரைக் கூட்டு
ஒன்று சேர்ந்து [கின்றார்;
புல்லாண்மை நிறைக்கின்றார்; புகைகின்றார்; பொங்கு
நல்லோர் வாழ்வைக் [கின்றார்!
கொல்லாமல் கொல்லுகின்றார்; கூசாமல் தள்ளுகின்றார்;
நெஞ்சே! நெஞ்சே!

10. எள்ளளவும் பிறர்துயரம் எண்ணுகிலார்; கவலுகிலார்;
எலும்புக் கூட்டில்
உள்ளமெனும் உயிர்க்கருவை உணருகிலார்; உயருகிலார்;
உயிர்ப்பொ ழிந்தே
குள்ளமாந் தராய்க்குதித்துக் கூட்டுகின்றார் குறுவினைகள்
கோடி! கோடி!
எள்ளுவதும் இரங்குவதும் அல்லால்நாம் என்செய்வோம்
நெஞ்சே! நெஞ்சே! ○

www.thamizham.net - Free E book No 7421

உலகத் தமிழ்க் கழகச்
சொற்பொழிவாளர்கள்

நம் உலகத் தமிழ்க் கழகக் கொள்கை விளக்கங்களையும், தமிழின் சிறப்பு, தமிழர் வரலாறு குறித்த செய்திகளையும், உரமும் திறமும் சான்ற வகையில் எடுத்துக்கூறும் வல்லமை சான்ற சொற்பொழிவாளர் சிலரின் முகவரிகள் கீழே தரப்பெற்றுள்ளன. ஆங்காங்குள்ள உ. த. கிளைக்கழகங்களும், வட்ட, மாவட்ட அமைப்புகளும் பிற தமிழ் மன்றங்களும் இது சார்பாக அவர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

1. மொழிப்பேரறிஞர். ஞா. தேவநேயப் பாவாணர், க. மு. அவர்கள்
உ. த. க. தலைவர், ஆ-1135,2-ஆம் மேற்குக்குறுக்குச்சாலை,
காட்டுப்பாடி நகர் விரிவு (அ.நி) வ. ஆ. மாவட்டம்.

2. பாவலர். திரு. பெருஞ்சித்திரனார் அவர்கள்,
"தென்மொழி" ஆசிரியர் (உ. த. க. பொதுச்செயலாளர்)
கடலூர்-1. (தெ. ஆ. மாவட்டம்)

3. புலவர். திரு. இறைக்குருவனார் (உ. த. க. துணைச்செயலாளர்)
தமிழ் விரிவுரையாளர், வெற்றித் தனிப்பயிற்சிக்கல்லூரி,
மதுரை-2.

4. திரு. செங்கை. செந்தமிழ்க்கிழார். க. இ., ப. இ. அவர்கள்,
உ. த. க. பொருளாளர், செங்காட்டுப்பட்டி (அ.நி)
(வழி) துறையூர் (திருச்சி மாவட்டம்)

5. பேராசிரியர். திரு. தி. வை. சொக்கப்பனார், க. மு., ப. உ.
கன்னித் துறவியர் மடச்சாலை (Convent Road)
அழகாபுரம், சேலம்-4.

6. பேராசிரியர். திரு கோ. நிலவழகனார், க. மு. அவர்கள்,
துணைமுதல்வர், தலைமைத் தமிழ் விரிவுரையாளர்,
பச்சையப்பன் கல்லூரி, காஞ்சிபுரம்.

7. **Dr. C. Elakkuvanar, M. A., M. O. L., Ph. D.,**
Head of the Department of Tamil,
Osmania Univeristy, Hyderabad (Andhra)

8. திரு. மு. தமிழ்க்குடிமகன், அறி. இ., க. மு. அவர்கள்,
தமிழ் விரிவுரையாளர், யாதவர் கல்லூரி, மதுரை-2

www.thamizham.net - Free E book No 7421

9. திரு. பா. வளனரசு, க. மு. அவர்கள்,
13, சிவன்கோவில் வடக்குத்தெரு, பாளையங்கோட்டை, நெல்லை.

10. திரு. இரா. இளவரசு, க. மு. அவர்கள்,
தமிழ் விரிவுரையாளர், அழகப்பர் கல்லூரி, காரைக்குடி.
(முகவை மாவட்டம்)

11. திரு. இ. மறைமலை, அறி. இ., க. மு. அவர்கள்,
தமிழ் விரிவுரையாளர், அரசினர் திருமகள் ஆலைக்கல்லூரி,
குடியேற்றம் (அ.நி), வ. ஆ. மாவட்டம்.

12. திரு. கு. ஐந்தெழுத்தன், க. இ., கீ. க. இ., அவர்கள்,
"தென்மொழி" அமைச்சர், கடலூர்-1. (தெ. ஆ. மாவட்டம்)

13. புலவர். திரு. அரிமதி தென்னகன் அவர்கள், தமிழாசிரியர்,
அரசினர் (ஆண்கள்) உயர்நிலைப்பள்ளி, மாதாகோயில் தெரு,
புதுச்சேரி-1

14. புலவர். திரு. மி. மு. சின்னாண்டார் அவர்கள்,
50, நத்தமர் தெரு, அம்மாப்பேட்டை, சேலம்-3.

15. புலவர். திரு. வி. பொ. பழநிவேலனார், கீ. க இ., அவர்கள்,
"மாணுக்கன்" ஆசிரியர், சாமியப்பா நகர்.
திருத்துறைப்பூண்டி (தஞ்சை மாவட்டம்)

16. திரு. த. வளங்கோ அவர்கள், 31, வ. உ., சி. தெரு, புதுவை-1.

17. திரு. மு. பொன்னவைக்கோ, பொறி., இ., அவர்கள்,
7/16, பத்தர் விடுதி, நடராசர் தெரு, சந்தானகோபாலபுரம்,
விழுப்புரம் (தெ. ஆ.)

18. புலவர். திரு. இராமையனார், (திருக்குறள் எண்திறலார்)
9, படைமேலர் (Major) அய்யாசாமி சந்து,
சோதிநகர், கோவிற்பட்டி.

(தொடரும்)

குறிப்பு: உலகத் தமிழ்க் கழகச் சார்பாகச் சொற்பொழிவாற்ற விரும்பும் அன்பர்கள் அந்தந்த மாவட்ட அமைப்பாளர்வழி, தலைமையகத்துடன் தொடர்பு கொள்ள வேண்டுகிறோம்.

பொதுச்செயலாளர்.

www.thamizham.net - Free E book No 7421

செய்தியும் அறிக்கையும்

செய்தி எண்: உ. த. க. 2/2/2001

1. கழகச் செய்திகள்.

கீழ்க்காணும் ஊர்களிலும் நகரங்களிலும் உலகத் தமிழ்க் கழகக் கிளைகள் தொடங்கப்பெற்றுச் செயற்பட்டு வருகின்றன. ஆங்காங்குள்ள அன்பர்கள் விரும்பின், அவற்றில் உறுப்பினராகச் சேர்ந்து நாட்டுத்தொண்டும் மொழிப்பணியும் புரியுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

க. தஞ்சை மாவட்டம்

(அ) கதிராமங்கலம் ஊர்க்கிளை: தொடக்கம்: சுறவம்-உக; தலைவர்: திரு. அரங்க.பன்னீர்ச்செல்வன்; செயலர்: திரு. அரங்க சுந்தரமூர்த்தி; பொருளர்: பெயர் அறிவிக்கப்படவில்லை.

(ஆ) செம்பொன்னூர்கோவில் ஊர்க்கிளை: தொடக்கம்: சுறவம்-கஉ; தலைவர்: புலவர் திரு. மு. செல்வகணேசன்; செயலர்: திரு. தா. சிவக்கொழுந்து; பொருளர்: திரு. சு. சிதம்பரம்.

உ. சேலம் மாவட்டம்

(அ) கிச்சிப்பாளையம் ஊர்க்கிளை: தொடக்கம்: தி பி- உ000 சிலை-உக; தலைவர்: திரு. ம; பெரியசாமி, செயலர்: திரு. க. பெ. முத்து; பொருளர்: திரு. பொ. ஆறுமுகம்.

(ஆ) அரிசிப்பாளையம் கிளை: தொடக்கம்: 16-2-70; தலைவர்: திரு. தி. பூங்குன்றன்; செயலர்: திரு சீ. மலைநாடன்; பொருளர்: திரு அ. அறிவுமணி.

௩. மதுரை மாவட்டம்

(அ) சத்திரப்பட்டி ஊர்க்கிளை: தொடக்கம்: கும்பம்-உ. தலைவர்: திரு செ. இளஞ்செழியன்; செயலர்: திரு. சு. இளங்கீரன்; பொருளர்: திரு. செ. சின்னக்காளை.

www.thamizham.net - Free E book No 7421

(ஆ) மதுரை வட்டக்கிளை: தொடக்கம்: சுறவம்–கக; தலைவர்; திரு இரா. அரசு; செயலர்: திரு. சு. அறிவன்பன்; பொருளர். திரு. சுப . முருகவேந்தன்.

ச வடவார்க்காடு மாவட்டம்

கழிஞ்சூர்க் கிளை: தொடக்கம்: 2-2-70; தலைவர்: திரு. உலோ. கோவேந்தன்; செயலர்: திரு. மு. வேங்கைவேந்தன்; பொருளர்: திரு. மா. சு. மணி.

ரு. முகவை மாவட்டம்

(அ) வெளிப்பட்டணம் ஊர்க்கிளை. தொடக்கம். 15-2-70; தலைவர்: திரு. வே. கார்முகிலன்; செயலர்: திரு. மு. அரவிந்தன்; பொருளர்: திரு. மு இளங்கோ.

(ஆ) புதூர்க்கிளை: தொடக்கம்: 11-1-70; தலைவர்: திரு. ந. இளங்கோவன்; செயலர்: திரு. இரா. நெடுஞ்செழியன்; பொருளர்: திரு. ஆ. அரவரசு.

உ. பிறசெய்திகள்.

1. மதுரைத் தியாகராயர் பொறியியற் கல்லூரித் தமிழ் மன்றத்தின் சார்பில், தி. பி. உ00௧–சுறவம் உசு-இல் (6-2-70) நடைபெற்ற முத்தமிழ் விழாவில், "தென்மொழி" ஆசிரியரும், உ, த. க. பொதுச்செயலாளருமான பாவலர். திரு. பெருஞ்சித்திரனார் அவர்கள், "தமிழ் மேன்மையுற மாணவர், அரசினர், ஆசிரியர், தொழிலாளர், உழவர், மகளிர் பங்கு" எனும் தலைப்பில் நிகழ்ந்த பாட்டரங்கிற்குத் தலைமை தாங்கினார்கள்.

2. உலகத் தமிழ்க் கழகத் திருச்சிராப்பள்ளி நகரக் கிளையின் முதலாண்டு நிறைவு விழா, தி. பி. உ00௧ சுறவத்திங்கள் உஉ (8-2-70)-ஆம் நாள் நிகழ்வுற்றது. மொழிநூல் மூதறிஞர். திரு ஞா. தேவநேயப் பாவாணர் அவர்கள் இவ்விழாவிற்கலந்துகொண்டார்கள். திரு. ஆ. பழ. குமரப்பனார் தலைமை தாங்கினார். புலவர். திரு. புகழேந்தி க. இ., மொ. ப.. தலைமையில் பட்டிமன்றமும் நடைபெற்றது.

3. சேலம் மாவட்டம், பட்டணம் உ. த. க. கிளையின் சார்பில், கும்பம்–௧ 14-2-70-ஆம் நாள் மாலை 5-மணி யளவில், பாவாணர் பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது. ஊராண்மையாளர் திரு. மெ. சிதம்பரம் தலைமை தாங்கினார். திரு. பெ. தி. இளவரசனார் க. இ., ப.இ. பாவாணர் படத்திறப்பு நிகழ்த்தினார். புலவர். திரு. மி. மு' சின்னாண்டார், புலவர். திரு. குழந்தை, க. இ., திரு. அரணமுறுவல், கீ. க, இ ஆகியோர் சொற்பொழிவாற்றினர்

www.thamizham.net - Free E book No 7421

4. மதுரை தோக் பெருமாட்டி மகளிர் கல்லூரியின் முத்தமிழ் விழா தி பி. உ௦௦௧-கும்பம்-அ (19-2-70) அன்று நிகழ்ந்தபோது, பாவலர். திரு பெருஞ்சித்திரனார் அவர்கள் விழாவிற் கலந்துகொண்டு "நாடகத் தமிழ்" என்னும் தலைப்பில் விரிவுரை நிகழ்த்தினார்கள்

5. (நெல்லை) மதுரைத் திரவியம் தாயுமானவர் இந்துக் கல்லூரியின் சார்பில் நிகழ்ந்த திருவள்ளுவர் ஈராயிரத்தாண்டு விழாவில் 28-2-70 அன்று இரவு நிகழ்ச்சிகளின்போது பாவலர். திரு பெருஞ்சித்திரனார் அவர்கள் கலந்துகொண்டு "பரிமேலழகரும் பாவாணரும்" என்னும் பொருள்பற்றிச் சிறப்புரை யாற்றினார்கள்.

6. திருக்காட்டுப்பள்ளி உலகத் தமிழ்க் கழகக் கிளையின் முதலாண்டு விழா கும்பம்-உ௫ (8-3-70)இல், திரு வி. பொ. பழநிவேலனார் கீ. க. இ. அவர்கள் தலைமையில் நிகழ்வுற்றது. திருவினர் இரா. சந்திரசேகரன், பெ. மணியரசன், ஆகியோர் சொற்பொழிவாற்றினர். இளசை. திரு. மு. இராமலிங்கம் க இ. தலைமையிற் பட்டிமன்றம் நடைபெற்றது. திரு இரா. சந்திரசேகரனின் "உரிமைப்போர்"-கலை நிகழ்ச்சியும் இடம்பெற்றது.

அறிக்கை எண்: உ. த. க 2/2/2001

1. சென்ற இதழில் வந்த செய்தி எண்: உ. த. க. 10/2001 என்பதை 2/1/2001 என்று மாற்றிக்கொள்ளவும்

2 இவ்வாண்டின் முதலாம் ஆட்சிக்குழுக் கூட்டம் தி. பி. உ௦௦௧, மீனம்-௧௬-ஆம் பக்கல் (29-3-70) காலை 10-மணி யளவில், திருச்சிராப்பள்ளி அசோகா உண்டிச்சாலையில் நிகழும். அதுபோழ்து, நெறிமுறைச்சுவடி திருத்தம் பற்றியும். இவ்வாண்டின் செயல்திட்டம் பற்றியும் ஆராயப்படும். ஆட்சிக்குழு உறுப்பினர்கள் தக்க கருத்துரைகளுடன் கூட்டத்திற்குத் தவறாமல் வரும்படி தெரிவிக்கப்படுகின்றனர்.

3. தி. பி. உ௦௦௧-சுறவம் முதல், தங்கள் உறுப்பாண்மையைப் புதுப்பித்துக்கொள்பவர்கள் புதிய சேர்ப்புப்படிவம் நிரப்பித் தர வேண்டுவதில்லை. மாதவிளத்த அறிக்கை 2-இல் குறித்தலே சாலும். ஆயின் உறுப்பினர் கட்டணம் உரு. 1-00 புதிய ஆண்டிற்கெனச் செலுத்துதல் வேண்டும். உறுப்பினர் எண் மாறாது. சென்ற ஆண்டு இறுதியில் தொடங்கப்பெற்ற கிளையானாலும் இந்த ஆண்டுத் தொடக்கத்தில் புதுப்பித்துக் கொள்ளுதல் வேண்டும். கடந்த ஆண்டின் உறுப்பினர் கட்டணப் பகுதித்தொகையினைப் பொருளாளர்க்கு விடுக்காத கிளைக்கழகங்கள், அத்தொகை விடுத்த பின்னரே உறுப்பினர் புதுப்பிப்பு வேலையைச் செய்ய முற்படுதல் வேண்டும்.

மே/பா. தென்மொழி
கடலூர்-1.

பெருஞ்சித்திரன்,
பொதுச்செயலாளர், உ. த. கழகம்.

www.thamizham.net - Free E book No 7421

O 169: பேரன்புமிக்க ஐயா, நான் கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியில் இறுதியாண்டு எம். பி. பி. எசு. படித்துக் கொண்டிருக்கிறேன். திங்கள் தோறும் தென்மொழியைத் தவறாமல் படித்துச் சுவைத்துக் கொண்டிருக்கும் அன்பர்களில் நானும் ஒருவன். தென்மொழியில் வரும் கட்டுரைகள், ஆசிரியவுரைகள் ஆகியவை தமிழ் மொழி வளர்ச்சிக்கும், தமிழ்நாட்டு வளர்ச்சிக்கும், தமிழ் மக்களின் அறிவு வளர்ச்சிக்கும் உறுதுணையா யிருக்கின்றன.

—பூ. க. செல்வமணி, (மருத்துவ மாணவர்) சென்னை -31

O 170: தால்மியாபுரம் என்னும் பழம் பெயர்மாற்ற மாநில அரசு வேண்டுகோளை ஏற்று நடுவண் அரசு அனுப்பிய குறிப்பில் இந்தியிலும், ஆங்கிலத்திலுமே பெயர்ப் பொறிப்பு இருந்திருக்குமன்றோ! அதைத் தமிழாக்கிப் பெயர்ப்பலகையில் எழுதியிருப்பதைப் புகைப் படம் வழியே கண்டோம். பழங்கால்நத்தம் என்பதே சரியான ஊர்ப் பெயர். அதுவன்றிப் பழங்காநந்தம் என்று செய்தித்தாள் எல்லாம் வரிந்து கொண்டு இருக்க, அதனிலும் கேடாய்ப் பளங்காநத்தம் என்று பலகையில் எழுதப்பட்டுள்ளது. இதனைப் "பழங்கானத்தம்" என்று மாற்றி அமைத்து மகிழ்ச்சியின் நடுப்பட்ட மறுவை மாற்றி முழுவுவப்புச் செய்ய வேண்டுகிறோம்.

—இயற்றமிழ்ப் பயிற்றகம், திருவாரூர்.

O 171: வணக்கம். தங்களுடைய நூறாசிரியப்பாக்களைப் படித்து விட்டு என் தமிழாசிரிய நண்பரொருவர் "இப்புறநானூற்றுப் பாடல் இதுவரையும் நான் படிக்கவில்லையே! மிக நன்றாயுள்ளது. புறநானூற்றில் இஃது எங்குளது?" என்று என்னிடம் கேட்டார். இவ்வளவு எழிலோடு வருகின்ற பாடலைத் திங்களொருமுறையாவது படித்தின்புற வேண்டாவா?

—பெ. இளவரசு, கீழச்சிவற்பட்டி.

O 172: தந்தையீர்! கொள்கைக்காக, தாம் போற்றி வணங்கும் இறைவனே எதிர்த்து வந்தபோதும் அஞ்சாது நின்றவர் புலவர் நக்கீரர். அதுபோன்றே பாவேந்தர் பாரதிதாசனும் தன்னைப் பெரிதும் பாராட்டியவரையும் கண்டித்து எழுதிய கொள்கை மறவன். அவர் வழிநிற்கும் நீங்களும் கொள்கைக்காக எவர் வரினும் அஞ்சாது நிற்பது எமக்கு உள்ளப் பேருவகை அளிப்பதோடு செருக் (Vanity) கையும் தோற்றுவிக்கின்றது. தங்களின் சீர்த்திருத்தக் கட்டுரைகளும் பாடல்களும் சிறந்து விளங்குகின்றன. எனினும் சீர் திருத்தக் கருத்துகள் என்றும் மக்கள் உள்ளத்தில் நின்று நிலவா. கொள்கை எய்தியபின் பாடல் மதிப்பிழந்து இருக்குமிடந் தெரியாது போம். அன்பினடியாக எழுவதும் வாழ்வுப் பொருளை உணர்த்துவது மாகிய இலக்கியமே என்றும் நின்று நிலவும். பாசம், அன்பு என்றும் எவர்க்கும் மாறாதது. சீர்திருத்தக் கருத்துகள் அவ்வப்போது மாறுவன. அந்த முறையில் 'ஐயை' 'நூறாசிரியம்' சிறந்த இடம்பெறுகின்றன. கழக இலக்கியங்களைப் போன்ற சிறந்த இலக்கியங்களைப் படைக்கும் வல்லமை தங்களிடம் உள்ளது. கழக இலக்கியங்களைப் படிக்கும்போது எழும் கருத்துகள் நயம், நுண்ணுணர்வு உணர்தலாலேயே அறியவல்ல உள்ளத்து உணர்வுகள் அன்பு உணர்வுகள்

(அடுத்த பக்கம் பார்க்க)

www.thamizham.net - Free E book No 7421

துன்ப உணர்வுகள் ஆகியவை 'ஐயை'யைப் படிக்கும் போது என்னுள்ளத்தில் முகிழ்த்தெழுந்தது. ஒவ்வொரு முறை படிக்குந்தோறும் புதிய புதிய கருத்துகளையும் இன்ப உணர்வுகளையும் துன்ப உணர்வுகளையும் உணர்கிறேன். எனவே, காலத்தால் அழியாது என்றும் தமிழின், தமிழனின் புகழ்பாடும் உயர்ந்த இலக்கியங்கள் பலவற்றைத் தொடர்ந்து படைத்துவாருங்கள். இருக்கும் ஆற்றலைச் சரிவரப் பயன்படுத்திப் பல உயர்ந்த இலக்கியங்களைத் தாங்கள் படைத்துத் தமிழன்னைக்கு அணியாகப் பூட்டவேண்டுமென்பது என்னுள்ளத்தெழுந்த வற்றாத பேரவா. தென்மொழியில் இதற்கு நல்ல மிகுதியான இடம் கொடுக்க வேண்டுகிறேன். இன்று உலகம் தங்களை அறியாவிடினும் என்றாவது ஒருநாள் அறியத்தான் போகிறது. அன்று இழப்பிற்காக வருந்தும்; எனவே சலிப்புறாது செயல்படுவீர். உமக்குத் தமிழன்னையின் அருள் என்றும் கிடைக்கும்.

—எழிற்செல்வன்—எதுமலை.

O 173: வணக்கம். கடந்த ஓர் ஆண்டுக்காலமாகத் தென்மொழியைத் தொடர்ந்து படிக்கிறேன். தென்மொழியை நான் என் கைகளில் தொடும் பொழுது நான் தமிழகத்தில் தமிழ்த்தாயின் மடியில் தவழ்ந்து இனிமை மொழி பேசுவதுபோல் இருக்கின்றது. நான் மலேசியாவில் பிறந்து பத்தொன்பது அகவை ஆகிறது. இதுவரையில் தென்மொழியைப்போல் இலக்கணச் சுவைபடும் கருத்து மிக்க புத்தகங்களைப் பார்த்ததில்லை. நான் ஒருநாள் எங்கள் தலைநகர் கோலாலம்பூர்க்குச் சென்றிருந்தேன். அப்பொழுது ஒரு புத்தகக் கடைக்காரர் வந்து கொண்டிருந்தார். அவரை நிறுத்திச் சில புத்தகங்கள் வாங்கினேன். அப்பொழுது அந்தப் பெரியவர் "தம்பி தென்மொழியை வாங்கிப் படியுங்கள்; ஒவ்வொரு தமிழரும் வாங்கிப் படிக்க வேண்டிய புத்தகம்' என்றார். "சரி" என்று ஒரு வெள்ளி கொடுத்து அன்றையிலிருந்து இன்றுவரை மாதம் தவறாமல் வாங்கிப் படித்துக்கொண்டு வருகிறேன்.

—க. ப. சுப்பையா, பத்துதீகா கிள்ளான், மலேசியா.

O 174: தமிழ்ப்பெரும் பாவல! வணக்கம். எனக்கோ தமிழின்மீது சொல்லொணா ஆர்வம் உண்டு. 'தென்மொழி' வாயிலாக மிகு பயன் அடைந்தும் வருகிறேன். இனி, தொடர்ந்து படித்தும் வருவேன். என்னால் முடிந்த உதவியைத் தென்மொழிக்குக் கட்டாயம் ஆற்றுவேன். நான் தமிழன் அல்லன், எனினும் நான் என் பெயரை (பாண்டுரங்கன்) மாற்றிப் புனைபெயராகத் 'தமிழ்த்தாசன்' என்று வைத்துக்கொண்டேன். தமிழுக்கு உள்ளத்தை இரையாக்கிய தங்கள் திருப்பெயர் (புகழ்) தமிழகத்தில் என்றும் நிலவுக என இறைவனை வேண்டுகிறேன். வெல்க தங்கள் தமிழ்த்தொண்டு!

—தமிழ்த்தாசன், மைசூர்.

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.

www.thamizham.net - Free E book No 7421